[redacted] இதழ்: 6 மலர்: 3 மாசி / பங்குனி 1995


$1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOPAL FURNITURE

Tel: (416) 785-9544 Pager: 330-5100



★ அலுமாரி (இலங்கை & கனடாவில் உள்ளதுபோல்)
★ மேசைகள், கதிரைகள் ★ கம்பியூட்டர் மேசைகள்
★ குழந்தைகளுக்கான தொட்டில்கள்

மற்றும் உங்களுக்குத் தேவையான சகலவிதமான
தளபாடங்களையும் உறுதியாக செய்து கொள்வதற்கும், உங்கள்
வீட்டுத்திருத்த வேலைகளையும் (basement Work) குறைந்த செலவில்
செய்து கொள்ளவும், நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

## கோபால் பேனிச்சர்ஸ்

2178 Eglinton Ave. W, Toronto, Ont.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத மலர்

# ரோஜா

மலர்.3 இதழ்.6

**பெப். 13, 95 - ஏப்ரல் 13, 95**

ஆசிரியர்.
***வி.எல். ஆனந்த்.***

பிரசுரம்/விளம்பரம்/அச்சுவேலை/விநியோகம்.
***ரிவி லா பப்ளிக்கேஷன்ஸ்***

வடிவமைப்பு/அச்சமைப்பு
*எல். **கிரிஷோத் ரைப்செட்டிங்***

அட்டை வடிவமைப்பு.
***கரன் கிராப்***


அட்டை அச்சுவேலை.
***குவாலிற்றி அச்சகம்***

ஓவியம்.
***ரூபி***
***கருணா***


**Articles/Advertisements**
**TEL: (416) 425 2884**
**FAX: (416) 425 2625**

**Address:-**

**"ROJAH"**
**F.P.P.O., P.O.BOX 45593,**
**747 DON MILLS RD,**
**DON MILLS,**
**ONT. M3C 3S4, CANADA.**



மலர்ந்த ரோஜா..... - பேசும்
ஆசிரியரின் பேனா!.......



# தப்புக்கணக்கு.....

தாய் பத்து மாதமாய் எம்மைச் சுமந்து பெற்றெடுக்கின்றாள். தாய் பேசும் மொழியே எனது தாய் மொழி. அது தமிழ் மொழி.

சில மாதங்களுக்கு முன்னர் ஒரு விருந்து உபசாரத்தில் ஒருவருடன் விவாதத்திற்குள்ளானேன். அவரின் விவாதம் இன்னும் சில காலத்தில் தமிழ் பத்திரிகைகள், சஞ்சிகைகள், கடைகள் தேவையில்லை. காரணம் இனிவரும் இளம் சமுதாயம் தமிழ் கதைக்கப் போவதில்லை, தமிழ் கடைக்குப் செல்லப் போவதில்லை.

**ஏன் இந்த வீண் விவாதம்?**
**அவர் விவாதித்தது போல ஒரு தமிழ்**
**பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தை மாறினால்**
**அதற்கு யார் பொறுப்பாளியாவர்?**

ஒரு பிள்ளையின் பழக்கவழக்கங்கள் நன்கு அமைய பெற்றோர்களின் வழி நடத்தல் முக்கியமான தொன்றாகும்.

ஒருவர் செய்யும் விவாதத்தை ஏன் பெரிதாக்க வேண்டும்? ஆனால் நூற்றுக்கு ஒருவர் இப்படியும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் போடும் தப்புக்கணக்கிற்கு விடை தொலைவில் இல்லை. . .

~ வி.எல். ஆனந்த் ~






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப் படத்தை நன்றாகக் கவனியுங்கள்.
இந்த ஓவியத்திற்குள் கவிதையொன்று புதைந்துகிடக்கிறது.
கவிதைக்கு பக்கம் நான்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனைக்கூடச் சுட்டுவிடலாம்!

குகப்பிரியா

இவள்......
சங்க காலத்திலிருந்து இன்றுவரை
சரித்திரமாக்கப்பட்டவள்!
கற்பு நிலைபற்றியும்,
கணவன் வழிபாடுபற்றியும் சொல்லி
கடவுளாக்கப்பட்டவளே தவிர
உணர்வுள்ள ஜீவனாக இவளையாரும்
உணர்ந்ததாகத் தெரியவில்லை!
அர்த்தராத்திரியில் இவள் அழகியாகவும்,
அடுப்பின் புகையில் இவள்
அடிமையாகவும் இருப்பதையே
கற்பு நெறியாக அன்று கதைக்கப்பட்டது!
அந்த நாட்கள் அழிந்து போயிற்றா?...
இல்லை!.... இல்லை!..... இல்லவேயில்லை!
இன்றும் எத்தனைகரங்கள் இவளைச்சுற்றிலும்....
படைப்பின்சிகரம், பண்பின் உருவமென்று
கற்பைவைத்துக் கதைவிடும் கரங்கள்!
கட்டிலில் இவளைக்கட்டியணைக்க
தட்சணை கேட்கும் பிச்சைக்கரங்கள்!
மகளாய், மனைவியாய், தாயாய், தலைவியாய்
வாழ்வதேவிதியெனும் வரட்டுக் கரங்கள்!
இளமுலை சுவைத்து, இடைசுகம் ருசித்து
நடைதனைமாற்றும் கசாப்புக் கரங்கள்!
புல்லானாலும் புருசனேயென்று
சொல்லித்திரியும் சோதாக்கரங்கள்!
ஆணுக்குப் பெண் அடிமையேயென்று
"அடித்துச்சொல்லும்" ஆணவக்கரங்கள்!....
உன் கழுத்தை நெரித்துக் காவுகொடுக்கும்
கரங்களின் கூட்டம் அதிகம்தான்
ஆனாலும்....
இழந்துவிடாதே உன் நம்பிக்கையை....
உன் ஒவ்வொரு அசைவிலும் நெருப்புண்டு
அத்தனை கரங்களையும் அழித்துவிடலாம்!
உன் கரங்களைத்தீயாக்கி
கால்களைச் சிறகாக்கு!
சூரியனைக்கூடச் சுட்டுவிடலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதம்

ஆயகலைகள் அறுபத்து நான்கினி லும் சிறப்புற்று நிற்கும் பரதக் கலை பரதமுனிவரால் அறிமுகப்படுத்தப் பட்டு பண்டு தொட்டு வளர்ந்து வரு தலும் காலத்தால் பின்தோன்றிய கலைகள் எல்லாம் போட்டியிட்டும், அழியாத பண்பாட்டுக் கருவூலமாக விளங்கும் பரதக் கலையானது ஆட லோடு பாடலும் அங்க அசைவுக ளோடு அபிநயமும் சுருதியோடு தாளமும் இணைந்து விளங்கி ஒரு பல்கலைகளின் இருப்பிடமாக திகழ்கின்றது.

ஆரம்ப காலத்தில் கவின் கலைகள் எல்லாம் இறைவனுக்கே அர்ப்ப ணிக்கப் பட்டவையாக இருக்கும் பொழுது, ஆலயங்களில் ஆடற் கலைக்கென நியமிக்கப்பட்ட அனங் குகள் தங்கள் நடனத் திறத்தால் இறைவனை துதித்து பேறு பெற்றார் கள். பின்னர் அரசர்களால் கலைகள் ஆதரவோடு வளர்க்கப்பட்ட கால கட்டத்தில் அரச அவைகளிலே நடன மாதர்கள் தங்கள் கலைத் திறனை வெளிப்படுத்தி பாராட்டும் பட்டமும் பெற்றுக் கொண்டார்கள்.

இன்று இக் கலைகள் யாவும் புதுமை படுத்தப்பட்டு இக் கலை களை தெரிந்திருப்பதே கௌரவம் என்ற கால வாக்கொன்று உருவாகி விட பொது மேடைகளிலும், நிகழ்ச்சி களிலும் பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் கூட பரதக் கலையை துறையறக் கற்று தாளமும், ராகமும் ஒன்று சேர தங்கள் கற்பனா சக்தி யைக் கலந்து தங்கள் கலைத் திறனை வெளிக்கொணர்கின்றார்கள்.

இவ்விதம் காலத்தால் அழியாத மூத்த கலைகளில் ஒன்றான பரதக் கலை இன்று மட்டுமல்ல இனிவரும் காலங்களிலும் வளர்ந்து, மெருகேறி, சுடர் விட்டுப் பிரகாசிக்கும் என நம்புவோம்.

நடன ஆசிரியை ~ சுரேஸ்வரி ~




## வெளிவந்துவிட்டது!

பெப்ரவரி 95-96 தமிழர் மத்தியில் வெளிவந்துவிட்டது. சமாதானத்தை சித்தரிப்பதாக அட்டைப் படம் அமைந்துள்ளது. 6வது வருடம் 108 கலர் பக்கங்களுடன் 620 பக்கங்களை உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆசிய வர்த்தக மஞ்சரியின் வருகையினால் எந்த ஒரு பாதிப்பும் இதற்கில்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. சென்ற வருட தமிழர் மத்தியில் 512 பக்கங்களுடனேயே வெளிவந்தது. மேலும் வளர எமது வாழ்த்துக்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களின்

# இலக்கிய உறவுகள்

முன்னுரை

## உறவுகள் பலவகை

**'மனைவிதாய் தந்தை மக்கள் முற்றுமுள சுற்றம்' என்பர் அப்பர் சுவாமிகள்.**

இதனை இரத்த உறவு, கல்வி உறவு, தொழில் உறவு, நட்புறவு எனப் பல்வாறு விரிக்கலாம். பாகுபாடு, அடிப்படைக் காரணங்களுக்கேற்ப வேறுபடும் அவரவர் கண்ணோட்டத்துக்கேற்பவும் அது வேறுபடலாம். இது உளவியல் சம்பந்தாமானது.

இலக்கிய அடிப்படையில் நான் உறவு கொண்ட பலரை இத்தொடரில் நினைவு கூருகின்றேன். இலக்கியத் துறைக்கு என்னை இட்டுச் சென்றவர்கள், தற்கால ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உழைத்தவர்கள், என்னுடன் சேர்ந்து யாழ் இலக்கிய வட்டம் மூலமாகவும் பிற தாபனங்கள் மூலமாகவும் ஆக்க இலக்கியப் பணியில் ஈடுபடடவர்கள் எனப் பல அறிஞர்களுடனும் நண்பர்களுடனும் உறவாடிய அனுபவங்களை நீள நினைக்கின்றேன்.

அருகில் இருக்கையில் அருமை தெரியாது என்பார்கள். பிரிந்திருக்கை யிலேதான் பெருமை விளங்கும். மேலும், வள்ளுவர் பெருமான் கூறும்-

**உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.**

என்பது இலக்கிய நண்பர்களுக்கும் நன்கு பொருந்தும்.

எனது இலக்கிய உறவுகள் இன்பகர-மானவை; அற்புதமானவை. சிலர் போட்டி பொறாமைகளால் அருமையான இவ்விறவுகளை அனுபவிக்கும் வாய்ப்புக்களை இழந்திருக்கலாம். எனக்கு அத்தகைய நிலைமை என்றைக்குமே ஏற்பட்டதில்லை. ஏனெனில், மிகுந்த தன்னம்பிக்கையுடனும் அப்பழுக்கற்ற உள்ளத்துடனும் இயன்ற அளவுக்கு இலக்கியப்பணி புரிந்து வந்த அதே வேளையில், ஏனைய இலக்கிய கர்த்தாக்களையும் நன்கு மதித்துப் பழகிவந்திருக்கின்றேன்.

கொள்கைப் பூசல்களும் என்னைக் குழப்பியதில்லை. கொள்கை வேறுபாடுகள் இருக்கவே செய்யும்; இருக்கவும் வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பது ஒருவகை வீரம்; விவேகம். இலக்கியத்தின் இலட்சியமும் அதுவாகவே இருக்க வேண்டும். இந்த அடிப்படையில், மாறுபட்ட கொள்கையாளர்களையும் மதித்து வகுக்கப்பட்டதுதான் எனது இலக்கியப் பாதை.

எனினும், நில்லா உலகில் எமது கொள்கையே நிலைக்குமென நினைத்து, அதனையே ஒரு சீனச்சுவராக்கி, தமக்கு ஒத்துவராத கொள்கையாளரைக் 'கீழ்ச் சாதியினர்' எனக் கருதியவர்களும் என்னைச் சுற்றி இருக்கவே செய்தனர். இவர்களுள் மறைந்து நின்றே என் கவிதைகளையும் பேச்சுக்களையும் கேட்டு மகிழ்ந்தவர்களும் உள்ளனர். சிலர் பிற்காலத்தில் நெருங்கிய நண்பர்களுமாயினர்.

இலக்கிய நெஞ்சங்கள் பகைமை உணர்ச்சியற்றவை. பகைவரைப் போல வெளியே பேனாக்களாலும் நாவன்மையாலும் வெட்டிப் பிடுங்கினாலும், உள்ளுக்குள்ளே ஒரு பெரியார்-ராஜாஜி உறவு, மதிப்பு ஒருவருக்கொருவர் இருக்கவே செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது- இலக்கியவாதிகள் பரந்த மனப்பாண்மை உள்ளவர்கள்; அழுக்காறு அற்றவர்கள்; நெஞ்சுரம் மிகுந்தவர்கள்; நீதி நியாயம் அறிந்தவர்கள்; சுருக்கமாகச் சொன்னால் அஃகி அகன்ற அறிவுடைச் சான்றவர்கள்; அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையெனும் ஐந்தும் வாய்ந்தவர்கள்.

இத்தகைய சான்றோருடன் உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரித்தலைத் தொழிலாகக் கொண்டிருந்த காலம் எனது பொற்காலம்.

அந்த உறவுகள் நீங்காத நினைவுகள். அவற்றை எழுத்தில் வடிக்கும் காலம் வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

**யான் பெற்ற இன்பம் பெறுக என் தமிழினம்.**

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்-
அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
உராகக் கொண்டா னுவந்து.

ஒரு சிறு எச்சரிக்கை. இவை ஆய்வுக் கட்டுரைகளல்ல; அனுபவக் கட்டுரைகள். அறிவு முயற்சியாலும் உறவு நவிற்சியே மேலோங்கி நிற்கும். உறவு உண்மையானது; ஒட்டி வரும் சம்பவங்களும் உண்மையானவையே. ஆயின், ஒரு தக்க சரித்திரமாகக் காட்டிச் செல்லப் போதிய ஆதாரங்கள் எதுவும் கைவசம் இல்லை. அதனால், முழுக்க முழுக்க எனது நினைவாற்றல் ஒன்றை மட்டுமே நம்பித் தொடர்கிறேன். நம்புவார் தொடர்க. கைவிடேன், கைவிடேனே!

★★★


அட்டைப்பட அபிநயம்

செல்வி.

வேணிலா

விக்னேஸ்வரன்




# 1. குறு குறு சிறகு

ஒரு தடாகம். அதனைக் கரையிலே இருந்து பார்ப்பது வேறு. உள்ளே இறங்கிக் குளிப்பது வேறு. குளித்த சுகத்தை மற்றவர்க்கு எடுத்துச் சொல்வது என்பது இன்னொன்று. கரையிலே இருப்பவர் பார்வையாளர்; இறங்கிக் குளிப்பவர் இரசிகர்; எடுத்துச் சொல்பவர் கலைஞர்.

சொல்வதற்குப் பல வழிகள் உண்டு. எழுத்து முறையைக் கையாள்பவன் எழுத்தாளன்.

எழுத்தாளர்களும் பல வகை. இலக்கிய எழுத்தாளர்கள் தனிவகை. அவனைத் தனி வகையாக்குவது அவனது கற்பனை வளம். இலக்கியகர்த்தாவுக்குக் கற்பனை இன்றியமையாதது. ஒருவனின் கற்பனை வளத்திற்கு அவன் பிறந்த சூழல், வளர்ந்த முறை, பெற்ற அனுபவங்கள் என்பன அடிப்படைக் காரணங்களாகின்றன.

நான் எனது பெற்றோரைச் சிறுவயதில் இழந்து, தாய்மாமன் தம்பியையா தம்பாப்பிள்ளை அவர்களுடைய அரவணைப்பில் வளர்ந்தவன். தங்கையின் பிள்ளை தறுதலையாகப் போகக்கூடாது என்ற கவனத்தில் மிகுந்த கண்டிப்போடும் கட்டுப் பாட்டோடும் அவர் என்னை வளர்க்கப் பாடுபட்டார்.

அவரது கட்டுப்பாடுகளையும் மீறிக் கண்டபடி திரிவேன். அவர் வீட்டுக்கு வருகையில் நான் இல்லாதுபோனால், அயல் அட்டையெல்லாம் என்னைத் தேடி அலைவார். எங்காவது ஒரு வெட்டையில், கட்டார வெயிலில் பெடியளுடன் விளையாடிக்கொண்டிருப்பேன்; துரத்திப் பிடித்துத் தூக்கிக்கொண்டுபோய் மாமியிடம் கொடுப்பார்; மாமி என்னைக் குளிப்பாட்டும் வரை சாப்பிடாமற் காத்திருப்பார்; பக்கத்தில் இருத்தி எனக்கு ஊட்டி ஊட்டித் தானும் உண்பார்.

ஒருமுறை நான் சாப்பிட மறுத்தபொழுது, 'சூரன் போருக்கு போகவேணும், சாப்பிடு கெதியாய்' என்று சொன்னது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகமிருக்கிறது. இவர் ஆண்டுதோறும் மட்டுவில் கந்தசாமி கோயிலில் என்னைப் பார்க்கவைத்த சூரன் போர்கள் பிற்காலத்தில் கந்த புராணத்தை விரும்பிப் படிக்கவைத்தனவெனின் மிகையாகாது. மேலும், இவர் மடியிலிருந்து நான் பார்த்த கோவலன் சரித்திர நாடகம் எனது முதல் இலக்கியப் பாடமாக அமைந்தது.

இவரே ஒரு கூத்துக் கலைஞர்; அழகாகப் பாடுவார். இவர் ஆடிய நொண்டி நாடகத்தைப் பாத்திருக்கின்றேன். அப்பொழுது எனக்கொன்றும் விளங்கவில்லை. ஆயினும், இவரது கூத்துப் பாட்டுக்கள்தாம் எனது சின்னஞ்சிறு செவிகளில் ஓசை உணர்வை ஊட்டியிருக்கவேண்டுமென நம்புகிறேன்.

இலக்கியக் கதைகளைச் சிறுபராயத்தில் எனக்கு அதிகம் கூறியவர் எனது தமையனார் திரு. வி. பசுபதி அவர்கள். சிவபெருமான் உபதேசம் ஆலமரத்தின்கீழ் நிகழ்ந்தது. எனது இலக்கியப் படிப்பு மாமரத்தின்கீழ் அடிக்கடி நடைபெற்றது. இராமர் கதையை எனக்குப் படிப்பிக்க அவருக்குப் பல நாட்கள் பிடித்தன. காரணம் கதையின் நீளமல்ல; தசரதனுக்கும் எனக்குமிடையில் நடந்த போர். அவர் பெயரைச் சொல்ல எனக்கு வரவே வராது. ததசரன் தசதரன் என்றெல்லாம் சொல்வேன். பாவம் என் அண்ணன். இதற்காக எத்தனையோ மிட்டாய்களையும் சூப்புத்தடிகளையும் வீணாக்கியிருக்கிறார். சில சமயங்களில் பொறுமையை இழந்து முதுகிலே தட்டுவார்; நான் அழுவேன். நோகாதுபோனாலும் பாடம் முடியட்டும் என்று அழுவேன்; தூக்கி முத்தமிடுவார். நித்திரையாக்கும் பொழுதும், 'எங்கே சொல்லு த-ச-ர-த-ன்' என்று அழுத்துவார். அதைக் கேட்டதும் எனக்கு தூக்கம் வந்து விடும். 'தசம்' என்றால் பத்து, 'ரதம்' என்றால் தேர் என்ற பொருளை அவர் எனக்கு விளக்கிச் சொன்னதாக ஞாபகமில்லை.

பசுபதி அண்ணர் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் வேலை பார்த்தவர். அங்கு வெளியிடப்படும் சிறுவர்களுக்கான நூல்களைக் கொண்டுவந்து படிக்கச் சொல்லி வாசிப்புப் பழக்கத்தையும் அவர் ஏற்படுத்தினார்.

'ஈழகேசரி'ப் பத்திரிகையை எனக்கு அறிமுகஞ் செய்து வைத்தவரும் அண்ணர் தான். அதிலுள்ள 'பாலர் பகுதி' யில் வரும் கதைகளையும் கட்டுரைகளையும் படிக்கச் சொல்லி கேள்விகள் கேட்பார். 1943ல் இவரைக் காண முதன் முறையாக நான் திருமகள் அழுத்தகத்துக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது அங்கு சரஸ்வதி பூசை நடந்து கொண்டிருந்தது. கலைவாணியின் கருணைபோலும் பிற்காலத்தில் திருமகள் அழுத்தகத்தாருடன் நெருங்கிய உறவு ஏற்படலாயிற்று.

எமதூர்ப் பிள்ளையார் கோயிலில் மார்க்கண்டையர் என்ற அந்தணப் பெருந்தகை பூசை செய்து வந்தார். பூசை நடக்கையில் நான் சேமக்கலம் அடிப்பேன். பரிசாக ஐயர் அவர்கள் தாமரை இலையில் அமுதளிப்பார். பிள்ளையார் என்னை ஆட்கொண்ட விதம் இவ்வாறாம். சேமக்கல அடிப்பு தாளலய உணர்வுக்கு அத்திவாரமிட்டது.

மேலும், திருவிழாக் காலங்களில் திருவாளர் சுப்பையாபிள்ளை அவர்களின் தலைமையில் கூட்டுப்பாடல் நிகழ்ச்சி நடக்கும். மத்தளத்தை அடித்தவாறு பாட்டுக்களைப் பாடுவார்; பக்தர் கூட்டம் தொடர்ந்து பாடும். இந்தக் கூட்டத்தில் நானும் ஒருவனாக இருந்து பாடுவேன். இவர் ஓர் இராமலிங்க பக்தர். இராமலிங்க சுவாமிகளின் அருட்பாக்களையே பெரிதும் பாடுவார்.

நடராசர் எல்லோர்க்கும் நல்லவரே- அவர்
நல்லதெல்லாம் தர வல்லவரே

என்று தொடங்கும் பாடலை அடிக்கடி பாடுவார். பாடுகின்ற பொழுது சந்தங்கள் தொனிக்கப் பிரித்துப் பிரித்துப் பாடுவார். அதற்கேற்ப மத்தளம் பேசும். திரு. சுப்பையாபிள்ளை அவர்களின் இந்த அரும்பணி எனக்களித்த பரிசு சந்தத் தொனி விளக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபத்திரக் கடவுள் எமது குலதெய்வம். வீட்டுக்குப் பக்கத்தில் அவரது ஆலயம். திருவாளர் தம்பு என்பவர் மூலம் வீரபத்திரர் வெளிப்படுவது வழக்கம். பறைமேள அடிப்புக்கேற்ப தெய்வம் ஆடிக்களிக்கும். பறைமேளம் அடிக்கையில் இலகுவான, அளவொத்த காலம் குறிலாகவும் நெடிலாகவும் வேகத்தைப் பொறுத்துப் பின்பற்றப்படும். இந்தப் 'பறைமேளத் தாளத்தை' ப் பிற்காலத்தில் எனது கவிதைகளில் முறையாகப் பயன்படுத்தியிருக்கிறேன்.

உடுக்கடி ஓசையையும் உடுக்கடிகாரரின் பாட்டுக்களையும் தனது ஆலயத்தில் கேட்டுக்களிக்கும் வாய்ப்புக்களையும் வீரபத்திரப் பெருமான் தந்தருளினார். முத்துமாரி, நல்லதங்காள், சாவித்திரி என்பன நான் கேட்டு அனுபவித்த உடுக்குக் கதைகளுட் சில.

இவையெல்லாவற்றிலும் மேலாக என்னைக் கவிபாட வைத்தது நான் கண்டு களித்த இயற்கை வனப்பாம். கவிதை இலக்கணத்தை நான் யாரிடமும் கற்றவனல்லன். ஒருவனைக் கவிஞனாக்குவது அவனின் இயற்கையுணர்வுத் திறனே என்பதனை என் அனுபவ வாயிலாகக் கண்டிருக்கிறேன்.

நுணாவிலூர் எனது பிறப்பிடம்; முல்லையும் நெய்தலும் பாலையும் சேர்ந்த சிறப்பிடம். அழகான தாமரைத் தடாகங்கள், பரந்த நெல்வயற் பரப்புக்கள், தென்னந் தோப்புக்கள், பனங்கூடல்கள், பற்றைக் காடுகள்...

குழைக்காடு என்றால் பலருக்குக் கோபம் வரும்; எனக்கு இன்பத் தேனாய் இனிக்கும். குழைக்காட்டின் குளிர்ச்சியிற் குளித்தெழும் சுகம் பரம சுகம்.

நுணாவிலூரின் வனப்பையையும் பெருமையையும் 'ஈழநாடு' வார இதழில் தொடர் கட்டுரைகளாக எழுதினேன். வேலைப் பழுக்களின் அதிகரிப்பால் கல்வயற் பகுதிபற்றி ஆராய்ந்து எழுத வாய்ப்புக் கிடைக்கவில்லை. கல்வயல் கவிஞர் வே. குமாரசாமி அவர்களைக் கொண்டு அந்தப் பணியை முடிக்க எண்ணியிருந்தேன். அதற்கு முன்னதாகவே 'நுணாவிலூர்' நூல் வெளிவர நேர்ந்துவிட்டது.

நுணாவிலூரின் இயற்கை வளம் என்னைக் கவிஞனாக்கிய விதத்தைப் பலவாறு பாடிக் களித்திருக்கின்றேன். எனது 'பாடுமனமே' என்ற கவிதைத் தொகுப்பிலுள்ள 'ஒருருவம் ஒளியுருவம்' என்ற பாடலில் இது வெளிப்படையாகவே பேசப்படுகின்றது. அதன் ஒரு பகுதி இது

இயலிசையிற் கிளிகுயில்கள் நாட கத்தில்
இனியமயிற் சோலைவன நுணாவி லூரின்
வயல்வெளியின் பருவவெழில் தண்ணென் காட்சி
வரம்பினுயர் பூக்குளங்கள் வழங்கும் மாட்சி
அயலழகுப் பனங்கூடல் காட்டும் மீட்சி
ஆனைமுகன் செலுத்துமருள் ஆட்சி யென்றே
செயல்மறந்து திளைத்தின்புற் றொன்றி மூழ்கித்
தெவிட்டாத தறுதலையாய்த் திரிந்த காலை-

ஒருருவம் ஒளியுருவம் ஒருநாள் வந்தென்
னுள்ளுணர்வைத் தெருட்டியருள் ஊற்றொன் றூன்றக்
கார்முகிலாய்க் கோடைமுகில் மாற்றங் கண்டு
கனத்தமழைக் கடல்பொழியக் காலம் வந்த
நீர்மைதனைப் போலமிக்க கனிந்து நெஞ்சம்
நின்றுண்மை விளக்கத்தில் நேராய்ப் பார்க்கும்
பார்வையினிற் படுகின்ற ஒவ்வொன் றுள்ளும்
பலகவிதைப் பொருள்வெளிக்கக் கண்டேனம்மா!

இவ்விதம் நான் பிறந்த குடும்பமும் வளர்ந்த சூழலும் இலக்கிய உலகத்தில் நான் பறந்து திரியச் சிறு சிறு சிறகுகளை முளைக்கச் செய்தன.

★★★

இலக்கிய
ஆக்கங்கள்
வரவேற்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலியே பறந்து வா!

-சிவா சின்னத்தம்பி


என் இனியவளே உன்னைப் போல்
இவ்வையகத்தில் எவளிருப்பாள்
ஈஸ்வரனாய் நான் நடந்தால்
ஈடு இல்லை நம் இருவருக்கும்
வேறு சொல்லத் தெரியவில்லை.
வேண்டுமடி நீ எனக்கு
காரணங்கள் நூறிருக்கு
காதலும் தான் அதனிலொன்று
பார்வதியே பரமசிவனுக்கும்
பாதிபலம் நீயறிவாய்
பார்வதிதான் நீ எனக்கு
பக்கத்தில் வந்து பாரிருந்து
பார்த்து விட்டாய்யென்றாலும்
பிரிந்திருந்து பார்த்ததில்லை.
இதன் காரணந்தான் இப்பாட்டு....
ஊர் வரைக்கும் போயுனதும்
எம் உற்றவரைக் கண்டுவர
நீ விரும்பி இருந்தாலும்
நாம் நினைத்ததையே நீ புரிந்தாய்.
எம் முத்து இரண்டு உன்னோடு
ஓர் முத்து மட்டும் என்னோடு
பாசமதை பூசை செய்ய
பக்தியுள்ள பைங்கிளியே
பறந்திங்கே வா கெதியில்
போர் நடக்கும் புனித மண்ணில்
போய் கால் மிதித்து வந்துவிட்டால்
பூர்வீக உணர்வெமக்கு பின்பு
போகும் வரை பிடித்திருக்கும்
தேர் ஒன்று உனக்கிங்கிருக்கு
தெரியுமடி அது உனக்கு- சிறிய
கார் இருக்கு கல்வீடிருக்கு
கருங்காலி மரம்போல ஒன்றும்
காலமெல்லாம் காத்திருக்கு
கட்டி விட்ட கண் இவனாம்
காதலியே வா பறந்து...
வேறு சொல்லத் தெரியவில்லை
வேண்டுமடி நீ எனக்கு....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரணி ஜுவலறி




## Thaarani Jewellery

- ***Diamond Cut & Other Bangles***
- *மகரப் பதக்கம்*
- *சிங்கப்பூர் நகைகள்*

*அனைத்து நகைத் தேவைகளுக்கும்... நகரில் சிறந்த கைவேலைப்பாட்டுடன் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.*

## (416) 289 6556

3630 Lawrence Ave. E., Unit 03, Scarborough (Markham & Lawrence) ON.


ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.K. BALES DRIVING SCHOOL

★ குறுகிய காலத்தில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் சித்தியடைந்த ஒரே ஒரு ஸ்தாபனம் - இதற்கு எம்மிடம் உண்டு ஆதாரம்.

★ 95% வீதிப்பரீட்சையில் சித்தியடையச் செய்யும் கடினமான வேலைக்கு எமது பாடசாலை பொறுப்பு; சாதாரண 5% உங்களின் உழைப்பு

★ 41% வாகனக் காப்புறுதி கழிவுச் சான்றிதழ் விரைவில் தரப்படும்

**தமிழ் ஆங்கிலத்தில்
கேள்வியையும் சரியான ஒரே
பதில் மட்டும் கொண்ட
எஸ்.கே. பாலேஸ்சின்
புத்தகத்தை வாங்கிப் படித்து
பயன் பெறுங்கள்.**

2627 Eglinton Ave. East
Suite # 3 & 5
**Bus: (416) 265-1297**
**Res: (416) 265-3920**

எஸ். கே. பாலேஸ்
(O.S.L)
(ஒன்றாறியோ பாதுகாப்புச் சபையில் அங்கீகாரம் பெற்ற மிகச் சிறந்த சாரதிப் பயிற்சியாளரும், முன்னாள் ஸ்கந்தா ஆசிரியரும்)


ராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரெலிபோனில் அச்செய்தியை கேட்ட நேரத்திலிருந்து என் மனம் என்னிடமில்லை. உடுத்திருந்த உடுப்புடன் அவசரமவசரமாக அவர்கள் கூறிய ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தேன்.... இல்லையில்லை......... என் மனம் மட்டும்தான் விரைந்தது. ஆனால் இந்த பஸ்...!

விஞ்ஞானத்தில் முழுமை பெற்ற நாடு. வல்லரசுகளுடன் தோளோடு தோளாக நிற்கும் நாடு என்றெல்லாம் பத்திரிகைகளில் படித்திருக்கின்றேன். இதை எழுதியவர்கள் நிச்சயம் பஸ்சில் பிரயாணம் செய்யாதவர்களாகத் தான் இருக்கவேண்டும். முன்னுக்குப் போய்க் கொண்டிருக்கும் பஸ், தரிப்பில் ஆட்களை ஏற்றிக் கொண்டிருக்கும் போது இந்த, நான் போகும் பஸ் எதற்காக அதன் பின்னால் நின்று தூங்குகிறதோ நானறியேன். பஸ்சில் ஏறிவிட்டால் கட்டாயம் அரை மணி நேரத்தை வீணடித்துத் தான் தீருவோம் என்பது போல எல்லா பஸ்தரிப்பு நிலையங்களிலும் அதன் பின்னே நின்று நின்று என் பொறுமையைச் சோதித்துக் கொண்டிருந்தது. ரைக்சி ஒன்றைப் பிடித்துப் போகாத எனது முட்டாள் தனத்தை எண்ணி நொந்து கொண்டேன்.



மனம் நிம்மதியற்றுத் தவித்தது. பெண் என்றால் அவளுக்குத் துன்பமும், கண்ணீரும் தான் என்றும் சொந்தமா? ஆண்டவா, ஏன் என்னை இப்படிச் சோதிக்கின்றாய்? அழகையும் கவர்ச்சியையும் பெண்ணுக்குக் கொடுத்த நீ, ஏன் நிம்மதியை அவளிடமிருந்து பறித்துக் கொண்டாய்? என்னை ஏன் இப்படிக் காலம் காலமாகக் கண்ணீர் வடிக்க வைக்கின்றாய்? திருமணமாகி இரண்டாண்டுகளில் விதவைக் கோலமா....? ஐயோ...!

சங்கர் எவ்வளவு நல்லவர். குணத்தால், அறிவால், அழகால் சிறந்த அவரை மணமகனாக ஏற்க எனது பெற்றோர்கள் விரும்பவில்லை. ஏன்..? பணம்...! பணம்.. அது கல்வி அறிவு இல்லாத ஒருவனையும் அறிஞர்கள் மத்தியில் சமனாக அமர வைத்துவிடும் ஒரு சடப் பொருள். உலகத்தை இன்று ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் சக்கரம். மதிப்பின் தரம் கல்வியில் தான் என்பதனை மறைத்துக்கொண்டிருக்கும் ஓர் மாயைப் பொருள்.

பண்டைக் காலங்களில் பண்டைமாற்று முறை மூலம் பொருட்கள் பரிமாற்றம் இருந்தபோது மனிதன் மனிதனாக வாழ்ந்து காட்டியிருக்கின்றான். கல்வியை கசடறக் கற்று சபைகளில் தம் திறமைகளைக் காட்டி உள்ளனர். தம் சந்ததியினர் கற்றுத் தேறக் கணக்கற்ற அறிவு நூல்களை இயற்றித் தந்தனர். ஆனால்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் அறிமுகப்படுத்தப்பட்டபின் அது என்னுமோர் திறமையாகி அறிவுடன் போட்டி போட்டுச் சபைகளில் சம அந்த ஸ்தைக் கோரி நிற்கிறது. அதனால் தான் சங்கரின் திறமைகள் அந்தப் பணக்காரக் கண்களுக்குப் புலப்படவில்லை. ஆமாம், அவைகள் கல்வி அறிவற்ற ஊமைக் கண்கள் அல்லவா?

சங்கரை நான் விரும்பிய படியால் அவர் பட்ட துன்பங்கள் கொஞ்சமா? எனது பெற்றோர்கள் எமக்குத் துன்பத்தின் மேல் துன்பத்தைத் தந்தனர். இருந்தும் எமது உறுதி தளரவில்லை. அவர்களுக் குத் தெரியாமல் இருவரும் பதிவுத் திரு மணம் செய்து கொண்டோம். இவ்வேளை அவர் நண்பனின் உதவியுடன் கனடா வந்தார்.

நான் பெற்றோர்களுடன் இருந்த அந்த ஒன்றரை வருடங்களையும் நினைத்துப் பார்க்கின்றேன். நான் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமா? அவர் வேறு பெண்ணுடன் வாழ்கின்றார் என்றும், என்னைக் கை விட்டுவிட்டார் என்றும் கனடாவில் இருப்ப வர்கள் மூலம் எனக்குக் கடிதம் தருவித்த னர். இவர்கள், எனது மனத்தைக் குழப் பிச் சஞ்சலத்தைத் தந்தாலும் அவற்றை நான் வெளியில் காட்டிக் கொள்ள வில்லை. நான் கொண்ட பொறுமை ஈற்றில் என் பெற்றோர்களிடமிருந்து விடுதலையை வாங்கித் தந்தது.

பஸ்சுக்குள் ஏற்பட்ட சலசலப்பு என்னை இவ்வுலகிற்கு கொண்டு வந்தது. என் அருகில் இருந்த பெண்மணியிடம் விசாரித்தேன். யாரோ சிலர் பஸ் சாரதி யுடன் விவாதித்து விட்டு அவரை அடித்து விட்டு ஓடிவிட்டார்களாம். பொலிஸ் வரும் வரை தாமதிக்கிறார்களாம் எனக்குச் சிரிப் புத்தான் வந்தது. ஈழத்தில் சுதந்தரம் பறி போனபடியால் சண்டை அங்கு நடைபெறு கின்றது. இங்கு! சுதந்திரம் கூடியபடியால் சண்டை நடக்கிறது. "நல்லாட்சி புரியும் ஓர் சர்வாதிகாரி ஆட்சி" தான் இன்றைய உலகிற்கு தேவையான ஆட்சி என்று சரித்திர ஆசிரியர் மயில்வாகனம் அன்று கூறியது ஞாபகத்திற்கு வந்தது. அமைதி யைப் பேணும் இந்த நாட்டிலும் மனிதன் அமைதியாக வாழ முடியாவிட்டால் சன நாயக அமைப்பு ஆட்சியும் மனிதனுக்கு ஏற்ற ஆட்சி இல்லைத் தானே!!

இரவின் பின் பகல் வரும் என்பார்களே அதேபோல் ஆறுமாதங்கள் என்வாழ்க்கை மிக அமைதியாக ஓடிவிட்டது. என் கண வர் என்னை மிகுந்த மகிழ்வுடன் வைத்தி ருந்தார். அவரின் பாசத்தினால் நான் என் பெற்றோர்களைக் கூட மறந்து விட்டேன். என் துன்பங்கள் யாவும் ஆதவனைக் கண்ட பனிபோல மறைந்து விட்டது என்று எண்ணினேன். ஆனால்....!

அன்று வேலையால் வரும் பொழுது சங்கர் சில பொருட்களைக் கொண்டு வந்து தந்தார். என்ன அவைகள் என்று விசாரித்தேன். நாளைதன் அக்காவின் மகன் ரகுவின் பிறந்த தினமாம். இருந்தா லும். வார இறுதியில் அதனைச் சிறப்பா கக் கொண்டாட இருக்கிறார்களாம். நான் வந்த பின் நடைபெறும் முதலாவது கொண்டாட்டம் அது என்பதனால் நாங் கள் முன்னின்று சிறப்பாக நடத்த வேண் டும் என்பது எனது கணவரது ஆசை. ஆனால் எனது ஆசை...?

சாதாரண மனிதனுக்கு இருக்க வேண் டிய கல்வி அறிவும் அற்றவள் சங்கரின் சகோதரி. சங்கருக்கு நேர் எதிர் மாறான- வள் எனது பெற்றோர்களைப்போல, சேக ரிக்க வேண்டிய செல்வத்தை கோட்டை விட்டு விட்டு, சேகரித்து விட்டேன் செல் வத்தை என்று செருக்குடன் வாழ்பவள் அவள். ஒருமுறை சங்கருடன் நான் அங்கு சென்ற பொழுது அவள் நடந்து கொண்ட விதம்..! சீ...நாகரீகமற்றவள்!!

"டேய், சங்கர்..... இவள் பணக்காரி என்றாய். இவள் அணிந்து வந்த சீலை நான் வீட்டுக்குக் கட்டிக் கொண்டிருப் பதை விட மட்டமாக உள்ளதே! ஓ... சின் னப் பணக்காரியா இவள்! ஓ..கோ.. கோ!! அப்படிப் பார்த்தால் நான் ஓர் கோடீஸ்வரி யல்லவா? சங்கருக்கும் இது பிடிக்க வில்லை. சமாளித்து விட்டு வந்துவிட்டார். ஆனால் இன்று பரிசுப் பொருட்களுடன் வந்திருக்கின்றார் என்றால்....போகத்தான் வேண்டுமா? முடியாது!!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் காலை வழமைபோல வேலைக் குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் சங்கர். சாப்பாட்டையும் தேனீரையும் அவனருகே கொண்டுவந்து வைத்த நான், சங்கர், ரகு வின் பிறந்த தினத்துக்கு நீங்கள் மட்டும் போய் வாருங்கள். நான் அன்று பட்ட அவமானம் தெரியும் தானே. அவவின் அந்தஸ்துக்கு ஏற்ற சீலை இல்லாவிட்டால் நான் வரமாட்டேன்" என்றேன்.

மறுகணம் இடிமுழங்கியது. "என்ன முட் டாள் தனமாக கதைக்கிறீர். என்னுடைய கஸ்டம் உமக்குத் தெரியும் தானே. ஓர் ஆள் உழைத்து எத்தனைக் கென்று செலவு செய்வது? நாய் குலைத்தால் நாங்களும் குலைப்பதா? அவ ஆணவம் கொண்டு அலைகிறாள் என்றால் நாங்கள் எமது கொள்கைகளை மாற்றலாமா? பிறக் கும் பொழுது யார் உடுப்புகளுடன் பிறக் கின்றனர்? பின்னர் உடலில் ஏற்படும் மாற்றங்களை மறைக்கத் தான் உடுப்புக் களைப் பாவிக்கின்றோம். அது... பருத்தி ஆடையாக இருக்கலாம், பட்டு ஆடை யாக இருக்கலாம். ஏன்... வெல்வெற் ஆடையாகக் கூட இருக்கலாம். அங்கே செயல்பாடு ஒன்றுதான். உடுப்பை வைத்து ஒருவனை எடை போடுவது அறி விலிகளின் செயல். சரி... சரி... உம்மிடம் தான் பலவிதமான உடுப்புகள் உள்ளதே அதில் ஒன்றைத் தெரிந்து கட்டும்.. ok..

"Please, சங்கர் புதுச் சீலை இல்லாவிட் டால் நான் வரமாட்டேன். என்னை வற் புறுத்தாதீர்கள்!" என் கொள்கையில் இருந்து நான் விலக விரும்பவில்லை.

மறுகணம்...! தேனீர் கோப்பை சுவரில் பட்டுச் சிதறியது. சாப்பாட்டுக் கோப்பை நிலத்தில் விழுந்து சரிபாதியாகியது. வெறி கொண்ட வேங்கை போல என்னை முறைத்துப் பார்த்த சங்கர் ஆவேசத்துடன் வெளியேறினான். பொங்கி வந்த அழு கையை கட்டுப்படுத்த முடியாத நான் ஓடிச் சென்று கட்டிலில் விழுந்து அழத் தொடங்கினேன். கவலை தீருமட்டும் வாய்விட்டு அழுதேன்.

இருள் நீங்கிப் பகல் வந்துவிட்டது என்று இவ்வளவு நாளும் மகிழ்ந்திருந் தேன். பகலின் பின் மீண்டும் இரவு வரும் என்பதனை நினைத்துப் பார்க்காது விட்டு விட்டேனே!

ரெலிபோன் மணி இடைவிடாது ஒலித் துக் கொண்டிருந்தது. பாய்ந்தெழுந்தேன். நேரம் மத்தியானத்தைத் தாண்டி விட்டது.



போனில் அவர் கூறிய செய்தி இடி யோசையாகி என் காதுகள் வழியே துளைத்து என்னை நிலைகுலைய வைத் துவிட்டது. என் கண்கள் அருவியாக மாறிட எதிர்காலம் கண்முன்னே ஊஞ்சல் ஆடியது. வெள்ளைப் புடவை கட்டி, பொட்டிழந்த பட்டமரமாகி நான் வாழத் தான் வேண்டுமா? காலையில் சிரித்த முகத்துடன் அவரை வேலைக்கு அனுப் பிய நான் செய்ததென்ன! மனக்குழப் பத்துடன் அவர் யந்திரத்தில் கையை வைக்க மின்சாரம் தாக்கி ஆள் பேச்சு மூச்சில்லாமல் ஆஸ்பத்திரியிலே....!! ஐயோ! என்னால் அவர் பட்ட கஸ்டம் போதாதா? நான் ஏன் இப்படிச் செய் தேன். ஐயோ!! வாய்விட்டு அழுதேன். யாரோ என்னைத் தடவுவது போலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தது. திடுக்குற்றுப் பார்த்தேன், அருகிலிருந்த ஆங்கில மாது என் கண்ணீரைத் துடைத்து விட்டு, "ஏனம்மா அழுகின்றாய், ஏதும் உதவி தேவையா" என்றார். இல்லை என்பதுபோலத் தலையை ஆட்டி விட்டு திரும்பிப் பார்த்தேன் அனைவரும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தனர். கூச்சத்தால் என் உடல் நெளிந்தது.

அவருடன் வேலைசெய்பவர் தந்த தகவலின்படி ஆஸ்பத்திரியின் அந்த அறையை நோக்கி ஓடினேன். அவன் மீது எனக்கு கோபம் தான் வந்தது. காலை 9 மணிபோல நடந்த விபத்தை எனக்கு மாலையா அறிவிப்பது? மனம் பயத்தால் படபடக்க, அலைபாயும் எண்ணங்களுடன் அவரின் அறையை அணுகினேன் உள்ளே நுழையக் கால்கள் தயங்கின. கதவின் ஊடாக உள்ளே கவனித்தேன் அங்கே...!!

என் தேகம் ஆனந்த சாகரத்தால் துள்ளிச் சிலிர்த்தது. உடலெங்கும் புதிய இரத்தம் ஓடி பெரும் அமைதியைத் தந்தது. அங்கு கண்ட காட்சி தந்த துணிவினால் அரைகுறையாகச் சாத்தப்பட்டிருந்த அறைக் கதவைத் திறந்தேன்.


அங்கே... கட்டிலில் ஒரு புறமாக மல்லாந்து படுத்துக் கொண்டிருந்தான் சங்கர். கையில் வைத்திருந்த பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த அவனுக்கு எனது வருகை தெரியவில்லை. நின்றபடி, நீண்ட நேரமாக அவனின் அழகையும், படுத்திருக்கும் ஒய்யாரத்தையும் ரசித்துக் கொண்டிருந்தேன்.

ஏதோ சத்தம் கேட்டு வாசல் பக்கம் திரும்பிய சங்கர் திகைத்தான். ஏய்..நீரா? நீர் எப்படி...? அவன் குழம்பினான். மறு கணம் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாகிய நான் அவன் மார்பில் விழுந்தேன். கதறி கதறி அழுதுகொண்டிருந்த என்னை அவனால் ஆறுதல்படுத்த முடியவில்லை.

என்னை மன்னிப்பீர்களா சங்கர்......... எனக்கு பட்டுச் சீலையும் வேண்டாம்........ புதுச் சீலையும் வேண்டாம்..... இருக்கிற சீலைகளை எறிய வைத்து விடாதீர்கள்...... வெள்ளைச் சீலை கட்ட வைத்து விடாதீர்கள், எனக்கு நீங்கள் தேவை... என்னைக் கைவிட்டு விடாதீர்கள்... அவர் அழுகை ஓயவில்லை.

பட்டினி இருந்து பழக்கப்படாத நான் கோபத்தில் சாப்பாட்டையும் தேனீரையும் எறிந்து உடைத்து விட்டு வந்தது மடமை என்று எண்ணினேன். அது எவ்வளவு நன்மையைத் தந்துள்ளது. நான் பசியில் மயங்கிவிழ இவர்கள் மின்சாரம் தாக்கிப் போட்டுது என்று ஆஸ்பத்திரியில் விட, காலையில் பறநாகமாகப் படமெடுத்தாடிய இவள் பெட்டிப் பாம்பாகி மார்பில் கிடக்க இப்படியும் ஓர் அதிஷ்டம் மனிதனுக்கு உண்டா? பட்டும் வேண்டாம், பருத்தியும் வேண்டாமாம்.! அப்படியா..! எனி அடிக்கடி பட்டினி இருக்க வேண்டியது தான்!!

(யாவும் கற்பனை)



## உயிருடன் ஒரு குட்டி டைனோசிர்!

சமீபத்தில் கண்டெடுக்கப்பட்ட டைனோசிர் முட்டையை செயற்கை முறையில் இன்குபேட்டரில் வளர்த்து, அந்த முட்டையிலிருந்து உயிருடன் வெளிவந்தது. ஆறு மாதமே ஆன இந்தக் குட்டி டைனோசிரை வளர்த்து உயிர்ப்பித்தவர் டாக்டர் ஜெராடு. இந்த டைனோசிர் முட்டைகளை தினமும் மருந்துகள் கலந்த நீரில் ஊற வைத்து, மின்சாரம் மற்றும் அனு சக்திகளை செலுத்தி உயிர்ப்பித்ததாக இவர் கூறுகிறார். இன்னும் மூன்று டைனோசிர் முட்டைகள் இருப்பதாகவும், அவற்றையும் வளர்த்து ஒரு டைனோசிர் பண்ணையை வைக்கப் போவதாகவும் இவர் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YARLTON MARKET

9 CLINTWOOD GATE #4 & 5A
On Victoria Park Ave

**Photocopying & Fax Services**

**Tel/Fax: (416) 445-5352**
**Tel: (416) 445-5763**

Lotto 649, TTC டிக்கற், முத்திரை, Metro Pass
இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
பால், பழம், மரக்கறி வகைகள்,
உடன் இறைச்சி, கடலுணவு வகைகளுக்கு



## யாழ்ரன் மார்க்கற்



அனுபவம் மிக்கவர்களால்
பெண்கள், சிறுவர்களுக்கான
நவநாகரீக ஆடைகள்,
உங்கள் விருப்பத்திற்கேற்ப
குறைந்த செலவில் தயாரித்து
கொடுக்கப்படும்

Wedding Garments
Saree Blouse
Birthday Garments
Boys (under 10) Pants,
Shirt, Coat

# SARA Tailors

**Tel: (416) 696-5573**

35 St. Dennis Dr. #223,
DonMills, ON.

திருமண மாலைகள், திருமண பூச்செண்டு, ஆண்டாள் மாலை, கொண்டை மாலைகள்
செய்து கொடுக்கப்படும். பூக்களும் எடுத்து கொடுக்கப்படும்.
திருமணப்பெண் அலங்கரிப்பும் செய்து தரப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்ராறியோ வர்த்தக
சம்மேளனத்தின் சிறந்த
சேவைக்கான
விருது பெற்ற
நிறுவனம்

ஏசியன் கிறிக்கெட் கிளப்பினரின்
சிறந்த வர்த்தக
நிறுவனத்துக்கான
விருது பெற்ற
நிறுவனம்

# ஸ்ரீ சிவா ஜுவலறி

## SRISIVA JEWELLERY

721 Bloor St. W., Toronto, Ontario. M6G 1L5

**(416) 531-4867**

# பொறிநுட்பம்

## PORINUDPAM

வாகனங்கள் திருத்தும் நிலையம்

Car Painting & Body Works

பெற்றோல், டீசல் வாகனங்களுக்கான சகல விதமான இயந்திர, மின்சார திருத்த வேலைகள்

வாகனங்களுக்கான அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குதல் (Vehicle Inspected & Certified)

Computer வசதியுடனான திருத்த வேலைகள்

இறக்குமதி செய்யப்பட்ட, உள்நாட்டு வாகனங் களின் விசேட நிபுணத்துவம்

**435 BOWES ROAD, UNIT. 5**

**CONCORD, ON. L4K 4A4**

**TEL: (905) 738-8360**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார் லைசென்ஸ் தந்திடுவாள் துர்க்கை

டொன்மில்ஸ் சிவப்பிரகாசத்தின்...

## ராசுக்குட்டி அப்பா

மோட்டார் லைசென்ஸ் கந்தோரில் சந்தனப் பொட்டும் குங்குமப் பொட் டோடும் நின்ற ராசுக்குட்டியரைப் பார்த்த ஆனந்தன் "ராசுக்குட்டி அப்பா என்ன இதுக்கை நிக்கிறியள்" என ஆச்சரியமாக கேட்டான்.

"ஏன் நான் இதுக்கை வரக்கூடாது எண்டு ஏதும் சட்டம் போட்டிருக்கிறாங்களே" என்ற ராசுக்குட்டியரை....

"எட! இப்ப அம்மன் கோவில் விக்டோரியா சந்தியிலை எல்ல இருக்கு! நான் மறந்திட்டன் கோயிலுக்குப் போட்டு வாறியள் போல" என்ற ஆனந்தம், கார் றோட் Test கொடுக்கும் அதி காரி நால்வருக்கு 'Hi! HOW ARE YOU' சொன்னதை கண்டார் ராசுக்குட்டியர்.

"எட ஆனந்தம் உவங்கள் எல்லாம் உனக்குப் பழக்கம் போல" என மெதுவாக கேட்டார்.

ஆனந்தத்துக்கு பெருமை பிடிபட "ஓம் அப்பு... ஓம் அப்பு... இவங்களை எனக்குத் தெரியும்"

"எட ஆனந்தம் அப்ப என்ர கடைசிப் பேரன் லைசென்சு எடுக்கப் போறானாம், ஒருக்கா உவங் களோடை கதைச்சு சரிக்கட்டன்" எனவும் ஆனந்தம்...

"அதெல்லாம் ஊர் மாதிரி இவங்கள் செய்யமாட்டாங்கள் அப்பு. உவங்களிட்டை லஞ்சம் ஒண்டும் செல்லாது. நல்லா ஓடிக் காட்டினாத்தான் தருவாங்கள். நானும் இப்ப 3 வருஷமா அலை யிறன் கிடைக்குதில்லை" என்றான்.

"எட நாசங்கட்ட நீ இன்னும் லைசென்ஸ் எடுக்க இல்லையே? நான் ஏதோ நீ மற்றவங்களுக்கு பழக்கிறியாக்கும் எண்டு நினைச்சன். எட நானும் வெள்ளி தவறாமல் கோயிலுக்கு வாறன் உந்த சந்தியில உன்னை அதிகம் சந்திக்கிறனான் நீ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஞ்சை உதுக்கே வாறனீ அதுசரி...... இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னம இன்ஸ்பெக்டர் மார் போனாங்கள் எல்லோருக்கும் காய் சொன்னாய் அவங்களும் பதிலுக்கு காய் சொன் னாங்கள்" என்று இழுத்தார் ராசுக் குட்டியர்.

"அது அப்பு அவங்கள் எல்லாரிட்டையும் நான் றோட் டெஸ்ற்றுக்குப் பேனனான். அதில போய் போய் பழகிப் போச்சு" என்ற ஆனந்தனை தொடர்ந்த ராசுக்குட்டியர்

"எட இப்பதானே 17. 18 வயசு வந்த உடனை எடுக்கிறாங்கள்; அப்பிடி என்ன கஷ்டம் உனக்கு என்று கேட்கவும் ஆனந்தன்...

"அப்பு அதெல்லாம் பெரிய விசையம் உங்களுக்கு விளங்காது. ஊரிலை எண்டா குதிரை ஓடி கார் லைசென்ஸ் எடுத்து நாங்கள் இஞ்சை அப்பிடி முடியாது; அது சரி நீங்கள் ஏன் இதுக்கை நிக்கிறியள். இது லைசென்ஸ் எடுத்தவங்களுக்கு படம் எடுக்க நிக்கிற லைன். இஞ்சாலை வாங்கோ லைனில நிக்கிறவன் ஏச போறான். நீங்களும் விடுப்பு பார்க்காத இடமில்லை....."

"எட ஆனந்தம் வள்ளி அம்மை சொல்லிச்சு சும்மா சாப்பிட்டு சாப்பிட்டு போட்டு வீட்டை கிடவாமல் ஏதாவது செய்ய சொல்லி. பின்னை பார்த்தன் உந்த லைசென்சுக்கு குடுப்பம் எண்டு இரண்டு மாதத்துக்கு முன்னம் குடுத்தனான். இன்டைக்கு றோட்டு பரீட்சைக்கு நாள் தந்தாங்கள் அம்மாளாச்சியிட்டை ஒரு அர்ச்சனை பண்ணிப் போட்டு போங்கோ எண்டு வள்ளியம்மை சொல்லிவிட்டுது, அம்மாளாச்சியிட்டை போட்டு வந்தன் அம்மாளாச்சியே வந்ததுபோல ஒரு எலுமிச்சம்பழ நிறத்தோடை ஒருத்தி வந்தாள் "ரச்சுகட்டி கவ் ஆ யூ" என்றாள் O.K எண்டன் அவளும் கொஞ்ச தூரத்துக்கு ஓடிக்காட்டினதுக்கு பிறகு O.K பண்ணித் தந்தாள். அதுதான் படமெடுக்க இதிலை விட்டிட்டு போறாள்; அதுசரி நீ..."

என்று திரும்பினார் ராசுக்குட்டியர் ஆனந்தன் நின்ற இடத்தில் ஆபிரிக்க நாட்டு கறுப்பு பெண்மணி ராசுக்குட்டியரைப் பார்த்து "ஏ மான் மூவ்... மூவ்..." எனவும் ராசுக்குட்டியர் அரக்கினார்.

"ராசுக்குட்டியர் என்ன லைசன்சு எடுத்திட்டியள் எண்டு கேள்விப்பட்டன்" என்றார் எதிர்க்க வந்த முருகேசர்.

"எட இப்பதான் எடுத்துக் கொண்டு வாறன் அதுக்குள்ளை விசயம் ஊரெல்லாம் பரவிப் போச்சே, சரி... சரி நீ எங்கை அவசரமா போறாய்."

"தமிழ் கடையில கொஞ்சம் சாமான்கள் வாங்க போறன் வாங்கோ போட்டு வருவம்" என்ற முருகேசரை தொடர்ந்தார் ராசுக்குட்டியர். தமிழ்க் கடைக்கு வந்த ராசுக்குட்டியர் கடைக்காரருக்கும் தமிழ் கனேடிய பெண்மணிக்கும் நடந்து கொண்டிருந்த உரையாடலை உற்று கேட்டார்.

"எனக்கு கனநாள என்ரை கஸ்பன்ட் ஒரே ஆக்கினை பாருங்கோ யவ்னாவிலை அவிக்கிறது மாதிரி நீட்டு புட்டு வேணுமாம்" இது பெண்மணி. தொடர்ந்து கடைக்காரர் "ஓ... நீங்கள் குழல் புட்டை சொல்லுறியள் போல... "

"YES... YES ஓ நான் மறந்திட்டன் என்ரை கஸ்பன் ஒவ்வீசிலை வேலை செய்து போட்டு வரேக்க ஒண்டு கொண்டு வந்தவர் அது ஆவி சைட்டாலைபோகுது"

"ஆ... அப்ப எங்களிட்ட இப்ப புதிசாக இறக்குமதி செய்த G. S. K புட்டுக்குழல் வாங்கி பாவிச்சு பாருங்கோ, இது Special ஊரிலை இருந்து இறக்குமதி செய்தனாங்கள். இந்தா இதுதான் பாருங்கோ" என எடுத்துக் காட்டினார் கடைக்காரர்.

"ஓ... மை காட் றியல் யவ்னா புட்டுக்குழல் எவ்ளவு?" எனக் கேட்டா அப் பெண்மணி. 16 டொலர் பாருங்கோ எனவும் O.K நான் வாங்கிறன் என்று அதை வாங்கியபடி வெளியேறினா அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனேடிய தமிழ் பெண்மணி.

அவள் சென்றதும் ராசுக்குட்டியர் கடைக்காரரை கேட்டார், "தம்பி எட அதென்ன புதுப்பெயர் சொன்னனீ. ஏன் G. S. K புட்டுக்குழல், எட ஊரில AK 47 எண்டு கேள்விப்பட்டனான். இதுபற்றி கேள்விப்பட இல்லை. அதென்ன தம்பி விபரமா சொல்லன்...."

"இஞ்சேருங்கோ ஆச்சியின்ர பழைய சேலை சுத்தின புட்டுக்குழல் எண்டு சொன்னா அது ஒரு மாதிரி அதுதான் GRANDMA SAREE புட்டக்குழல் எண்டதை G. S. K எண்டு வைச்சிருக்கிறம்" ராசுக்குட்டியர் முருகேசரைப் பார்த்தார்

"முருகேசு சரி... சரி இஞ்சை பார் மூங்கில் மரத்துண்டு சுத்தி இழக்கயிறு கீழை பழைய சீலைத்துணி சரியாத்தான் பெயர் வைச்சிருக்கினம்."

"அது சரி தம்பி இந்த கீழை சுத்தியிருக்கிற சீலை இத்துப்போனா என்ன செய்யிறது இஞ்சை எல்லாம் காஞ்சிபுரங்களும் பனாறிசுகளுமாக எல்லே வீட்டுக்கு வீடு வைச்சிருக்கினம்" என்ற கேள்வியைப் போட்டார் ராசுக்குட்டியர். அதற்கு கடைக்காரர்... "அதுக்கும் நாங்கள் ஸ்ரீலங்கா பழைய சேலையள் வைச்சிருக்கிறம் பீஸ் இரண்டு டொலர் அப்பு. ஓ... புட்டுக்குழலுக்கும் மாத்து சீலை இருக்கு" என்ற ராசுக்குட்டியர் சரி சரி என்றபடி நின்றார்.

கடை ரெலிபோன் அடித்தது கடைக்காரர் ரெலிபோனை எடுத்து "கலோ" என்றார். ரெலிபோனில் பேசியவரைத் தொடர்ந்து கடைக்காரர் "அக்கா சின்னத் தம்பியை முதலிலை அனுப்புங்கோ உங்கை காலமை வந்தது. வேலுச்சாமியை ஆறுதலா அனுப்புங்கோ அது பிறகுதானே வந்தது தொடர்ந்து ரெலிபோனில் கதைத்த குரலை கேட்டு கடைக்காரர் "ஆ இல்லை அக்கா பெரியவர் கனடாவுக்கு வந்திட்டார் இஞ்சை வர இல்லை... வந்தா... சிலவேளை நாளைக்கு வந்தா உங்களிட்டை அனுப்பி வைக்கிறன் அக்கா... ஓமக்கா... உங்களுக்கு இல்லாததே... ராசுக்குட்டியோ வேண்டாமோ... அலுப்போ ஆ... சரி... சரி அக்கா ஓ... பெரியவர் இண்டைக்கு வந்தா கட்டாயம் அனுப்பிறன் சரி அக்கா வைக்கிறன்." கடைக்காரர் ரெலிபோனை வைத்து விட்டு முருகேசரின் சாமான்களுக்கு விலை போட்டு பணத்தை பெற்றுக் கொண்டார்.

"சரி தம்பி நாங்கள் வாறம்" என்றபடி ராசுக்குட்டியரும் முருகேசரும் கடையை விட்டு வெளியே வந்தனர். ராசுக்குட்டியரும் முருகேசரும் பஸ்தரிக்கும் இடத்துக்கு வந்ததும் ராசுக்குட்டியர் முருகேசரைப் பார்த்து "எட முருகேசு கடையிலை என்ரை மூக்குப்பொடியை விட்டுட்டன் போல வாறன் பொறு" என்று முருகேசின் பதிலையும் கேட்காது கடைக்கு சென்றார்.

ராசுக்குட்டியரை பார்த்த கடைக்காரர் "ஏதும் மறந்திட்டியளோ?" என கேட்கவும் "ராசுக்குட்டியர் தம்பி எனக்கு ஒரு சந்தேகம் அதுதான் மற்றவரை அங்கை சுத்திவிட்டு வந்தனான் நீ ஆரோடை ரெலிபோனிலை கதைச்சனீ இலங்கை தமிழ் காறியோ?"

"ஓ... அதுக்கென்ன?"

"இல்லை... அப்பிடி இப்பிடி பிசினசும் செய்யினமே."

"என்ன.... பிசினஸ்...எனக்கு விளங்க இல்லை பாருங்கோ" எனக் கேட்டார் கடைக்காரர்...

"இல்லை.... சின்னத்தம்பியை அனுப்பினனீ பிறகு வேலுச்சாமியை அப்ப... இது வேறை நான் ராசுக்குட்டியர் என்னை வேணாம் என்டிறாள் நீ! பெரியவர் வந்தா அனுப்பிறன் எண்டிறா... எனக்கு விளங்க இல்லை... அப்பிடி இப்பிடி செற்பண்ணி..." கடைக்காறர் விழுந்து... விழுந்து சிரித்தார். "அப்பு அப்பு அது என்ரை வாடிக்கைக் காறர் பட கசற்றுகள் வாங்கிக் கொண்டு போனவை பார்த்ததை அனுப்பிறன் பார்க்காததை நான் அனுப்பிறன் எண்டு கதைச்சனான் அது சரி நீங்கள் ஏன் அதுபற்றி விசாரிக்கிறியள்?"

"இல்லை.... ஒரு சபலம்." என்றபடி விரைந்தார் ராசுக்குட்டியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்பு

தயாரிப்பு:

~ எஸ். பாலச்சந்திரன் ~

பிரதி வியாழக்கிழமை தோறும் 530 A. M அலைவரிசையில் வான் அலைகளில் தவழ்ந்து வந்து நேயர் நெஞ்சங்களைத் தாலாட்டும் தமிழோசை வானொலி நகழ்ச்சித் தயாரிப்பாளர் திரு. S. ஸ்ரீஸ்கந்தகுமாரையும், அறிவிப்பாளர்களில் ஒருவரான திரு. M. கலாதரனையும் ரோஜா சஞ்சிகைக்காக, திரு. S. ஸ்ரீஸ்கந்தகுமார் அவர்களின் இல்லத்தில் சந்தித்தேன்.

குளிர் மிகு காலைப் பொழுதிலே வீட்டுக் கதவைத் தட்டிய போது வாருங்கள்! வாருங்கள்! உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம் என்று கூறி அன்போடு வரவேற்றார்கள்.

உரையாடல் ஆரம்பமாகியது. அந்தச் சுவையான உரையாடலை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

வணக்கம்! ஸ்ரீஸ்கந்தகுமாரன் அவர்களே....
வணக்கம் S. பாலச்சந்திரன் அவர்களே...., 'ரோஜா' சஞ்சிகைக்காக தமிழோசை வானொலிக் கலைஞர்களைச் சந்தித்து உரையாட வந்திருக்கிறீர்கள். முதற்கண் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தமிழோசை வானொலி நிகழ்ச்சியை நடத்த வேண்டு மென்ற எண்ணம் உங்களுக்கு எப்படி உண்டானது?**

ஸ்ரீஸ்கந்தகுமாரன்: *முக்கிய காரணம் முன்பு நான் "தேமதுரம்" வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளருடன் இணைந்து செயற்பட்டது. அடுத்தது கலையார்வமும் என்னுடைய நண்பர்கள் தந்த உற்சாகமும் என்று உறுதியாகக் கூற விரும்புகிறேன்.*

**முன்பு நீங்கள் தேமதுரம் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பில் பங்கெடுத்திருக்கிறீர்கள். அந்த அனுபவம் உங்களுக்கு எந்த வகையில் கைகொடுக்கிறதென்று கூற முடியுமா?**

**ஸ்ரீ:** *உண்மைதான். முன்பு தேமதுரம் வானொலியில் பணியாற்றியதன் காரணமாக, இப்பொழுது தமிழோசை வானொலி நிகழ்ச்சிகளை நேயர்கள் விரும்பிக் கேட்கக் கூடிய அளவுக்கு தயாரித்து வழங்கக் கூடிய ஒரு வல்லமையை பெற்றிருக்கிறேன். P. ஞானேஸ்வரன், P. விக்னேஸ்வரன், கமலா தம்பிராஜா ஆகியோருடன் இணைந்து செயற்பட்டு வந்த நான், தேமதுரம் வானொலிச் சேவை நிறுத்தப்பட்டதும் அதிர்ச்சியடைந்தேன். அந்த வேளை P. விக்னேஸ்வரன், கமலாதம்பிராஜா, M. கலாதரன் ஆகியோருடன் தொடர்பு கொண்டு வானொலி நிகழ்ச்சி ஒன்றைத் தயாரித்து வழங்கினால் என்ன? என்று கேட்டேன். அவர்கள் சம்மதம் தரவே தமிழோசை காற்றோடு கலந்து வந்து ஒலிக்கிறது. சுருங்கச் சொன்னால் "தேமதுரம்" தந்த அனுபவமே எனக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுக்கிறது.*



**தற்போது உங்களுடன் யார் யார் இணைந்து பணியாற்றுகிறார்கள்?**

**ஸ்ரீ:** *இலங்கை வானொலியில் 25 வருடங்கள் பணியாற்றிய திரு. P. விக்னேஸ்வரன், கமலா தம்பிராஜா, பிரபல பத்திரிகை ஆசிரியர் D. B. S. ஜெயராஜ் (மஞ்சரி), எனது நண்பர் M. கலாதரன் இவர்களுடன் பச்சையப்பன் கல்லூரியில் M. A. பட்டம் பெற்ற பொன்னையா விவேகானந்தன்,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்செல்வி இன்னும் பலர் நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற உதவுகிறார்கள். இவர்களை நான் என்றும் மறக்கமாட்டேன்.

**வாரத்தில் இருநாட்கள் ஒலிபரப்பாகி வந்த "தமிழோசை" (அதாவது செவ்வாய் வியாழக் கிழமைகளில்) இப்போது வியாழக்கிழமை மட்டுமே ஒலிபரப்பாகிறது. இதன் காரணம் என்ன?**

**ஸ்ரீ**: இதற்குக் காரணம் பணப்பிரச்சனைதான். விளக்கமாகச் சொல்வதென்றால்... இங்கு பல வானொலி நிகழ்ச்சிகள் நடைபெறுகின் றன. நான் அண்ணர் M. P. கோணேஸ் அவர்களுடன் இணைந்து தற்போது வியாழக்கிழமை மட்டுமே நிகழ்ச்சியை வழங்குகிறேன். தனியொருவனாக இப்படியொரு நிகழ்ச்சியை நடாத்துவதில் உள்ள சிரமங்களை நான் நன்கு அறிவேன். பணம் இருந்தால் ஒரு நாள் என்ன ஏழு நாட்களும் நிகழ்ச்சிகளை நடாத்தலாம். காலம் கனியும் போது மீண்டும் 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் நடாத்துவோம் என்பதை அன்பு நெஞ்சங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழோசை நிகழ்ச்சிகளை விறுவிறுப்பா கவும், சுறுசுறுப்பாகவும் தொகுத்து வழங்கும் கலாதரனிடம் சில கேள்விகள்...
வணக்கம் கலாதரன் அவர்களே.
வணக்கம் S. பாலச்சந்திரன் அவர்களே.



**ஒலிபரப்புத் துறையில் உங்களுக்கு ஈடுபாடு எப்படி உண்டானது?**

**கலாதரன்:** எனது தந்தையார் சங்கீத பூஷணம் திரு. முத்துக்குமார சர்மா அவர்கள், இலங்கையில் வானொலிக் கலை-ஞராகவும் திகழ்ந்தார்.

**உங்களின் தந்தை நல்லைக்குமரன் என்ற புனைபெயரில் அழைக்கப்படுபவரல்வா?**

ஆமாம். நல்லைக்குமரன் என்ற புனை பெயரில் பல கவிதைகள் கட்டுரைகள் முதலியவற்றை எழுதியிருக்கிறார். அவர் மூலம் என்னால் இலங்கை வானொலி நிலையத்துள் நுழைய முடிந்தது. இலங்கை வானொலி தயாரித்து வழங்கிய 'இளைஞர் மன்றம்' 'வாலிப வட்டம்' போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. சுமார் இரண்டு வருடங்கள் இப்படியான நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்ட காரணத்தால் ஒரு ஆர்வம் உண்டானது. ஆனால் கனடா வந்த பின்பு ஸ்ரீஸ்கந்தகுமாரன் அவர்கள் அறிமுகம் கிடைத்தது. அவரோடு தேமதுரம் வானொலியில் பணியாற்றியிருக்கிறேன். அப்போது இலங்கை வானொலி புகழ் P. விக்னேஸ்வரன், கமலாதம்பிராஜா போன்றவர்களின் தொடர்புகள் எனக்குக் கிடைத்தன. அவர்களின் உச்சரிப்பு, அறிவிக்கும் பாணி எல்லாம் எனக்குப் பிடித்து விட்டது மட்டுமல்ல ஒரு உற்சாகத்தையும் தந்திருக்கிறது. ஒலிபரப்புத் துறையில் ஈடுபடவும் முடிகிறது.

**உங்களைக் கவர்ந்து கொண்ட இலங்கை வானொலி அறிவிப்பாளர் யார் என்று கூற முடியுமா?**

இலங்கை வானொலியைப் பொறுத்த வரையில் இருவரை நான் நிச்சயமாகக் குறிப்பிட வேண்டும். ஒருவர் மதுரக் குரலோன் K. S. ராஜா. இளை ஞர்களைத் தன்னுடைய துரித நடையான அறிவிப்பினால் கவர்ந்து கொண்டவர். 'திரை விருந்து' என்ற நிகழ்ச்சியை அவர் தயாரித்து வழங்கிய விதமே அலாதியானது. மற்றவர் B. H. அப்துல் ஹமீது. ஹமீதின் அழகான உச்சரிப்பில் என் மன தைப் பறிகொடுத்தவன் நான். என்னைக் கவர்ந்தவர்கள் K. S. ராஜா, B. H. அப்துல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹமீத் என்று நான் கூறமுடியும்.

**நிகழ்ச்சிகளை எவ்வாறு தொகுத்து வழங்குகிறீர்கள் என்று வினவிய போது...**

தரமான நேயர்களின் ஆக்கங்கள் அனைத்திற்கும் நாம் முன்னுரிமை வழங்குவோம். மற்றது மறு ஒலிபரப்புச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. போதுமான ஆக்கங்கள் கைவசம் இருக்கின்றன. வருட இறுதியில் மறு ஒலிபரப்புச் செய்திருக்கிறோம். அதாவது நிகழ்ச்சிகளின் பின்னோட்டம்....

**எந்தவொரு அமைப்புக்காவது கட்டுப்பட்டு இயங்குகிறீர்களா? அல்லது நடுநிலையாக இயங்கித் தமிழை வளர்க்கவிரும்புகிறீர்களா?**

நாங்கள் சுதந்திரமாக நடுநிலையாகவே இயங்க விரும்புகின்றோம். தமிழை யாரும் அழித்துவிட முடியாது. அதுவாகவே அது வளரும். சிரிக்கிறார்....,
தமிழை வளர்க்கிறோம் என்று நான் சொல்ல விரும்பவில்லை. எங்களால் இயன்றதைச் செய்கிறோம் அவ்வளவுதான்.

**பெரும்பாலான நேயர்கள் வானொலி ஒலி பரப்பு நேரத்தை விளம்பரங்கள் விழுங்கிவிடுவதாக குற்றம் சாட்டுகிறார்கள். இதுபற்றி...**

இதுபற்றி உங்களுக்குக் கூடத்தெரிந்திருக்கும் என்று கூறிவிட்டு ஆர்ப்பரித்துச் சிரிக்கிறார். சிரித்துவிட்டு தொடர்ந்து சொன்னார். வானொலி நிகழ்ச்சிகளை வழங்கும் போது அறிவித்தல்கள், விளம்பரங்கள் அளவாகவிருந்தால் நல்லதுதான். தரமான நிகழ்ச்சிகளையும் வழங்க உதவியாக இருக்கும். ஆனால் தயாரிப்புச் செலவுகளை எவ்வாறு சமாளிப்பது. நேயர்கள் இதை விளங்கிக் கொள்ள வேண்டும். இப்பொழுது விளம்பரங்களில் தங்கியிருக்கி வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் நேயர்கள் விளம்பரதாரர்களின் ஆதரவுடன் விளம்பரங்கள் குறைவான நிறைவான நிகழ்ச்சியை வழங்க முடியும் என்று நம்புகிறேன்.

**உங்களுடன் இணைந்து பணியாற்றும் அறிவிப்பாளர்கள் பற்றி...**

P. விக்னேஸ்வரன், கமலாதம்பிராஜா இவர்கள் பற்றி நான் சொல்லித்தான் நீங்கள் அறியவேண்டும் என்பதில்லை. D. B. S. ஜெயராஜ் அவர்கள் செய்தி மஞ்சரியை வழங்குகிறார். இவர் இலங்கையிலும், கனடாவிலும் பிரபலம் பெற்ற பத்திரிகை ஆசிரியர். இவர்களுடன் பொன்னையா விவேகானந்தன், பச்சையப்பன் கல்லூரியிலே தமிழ் இலக்கியத்தில் M. A. பட்டம் பெற்றவர். சிறந்த தமிழ் ஆற்றலும், மேடைப் பேச்சுக்களில் ஆர்வமும் கொண்டவர். இவருடைய நிகழ்ச்சிகளின் வழி தமிழ் எளிதாக நேயர்களைச் சென்றடையும் என்று நம்புகிறோம்.

**தமிழோசையில் ஒலிபரப்பாகி வரும் 'வாழ்ந்து பார்க்கலாம்' என்ற நாடகம் பற்றிக் கூற முடியுமா?**

அநுபவமிக்க கலைஞர் P. விக்னேஸ்வரன் அவர்கள் கனடாவில் முதன் முதலாக இந்த நாடகத்தைத் தயாரிக்கிறார். தமிழோசை சார்பில் இவர் இந்த நாடகத்தைத் தயாரிக்கிறார். நாடகத்தில் இலங்கை வானொலிக் கலைஞர்களும் உள்ளூர்க் கலைஞர்களும் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். இயல்பான உரையாடல்களுடன் கூடிய நாடகமாக இது உள்ளது.

'ரோஜா' சஞ்சிகைக்காக சிறப்புப் பேட்டியை அளித்த 'தமிழோசை' வானொலிக் கலைஞர்களுக்கு நன்றியையும் வாழ்துக்களையும் கூறி விடைபெற்றேன்.

★★★

## உங்களுக்குத் தெரியுமா?

உலகின் மிகப் பெரிய புத்தகம் ஸ்காட்லாந்தில் உள்ள டுனோன் நகரில் இருக்கிறது. இந்தப் புத்தகத்தின் பெயர், "தி லிட்டில் ரெட் எல்ப்" வில்லியம் பி.உட் என்பவர் எழுதி வடிவமைத்த இந்த புத்தகத்தின் உயரம் 7 அடி 2 அங்குலம், அகலம் 5 அடி.

★★★

ஆங்கிலத்தில் அதிகமாக பயன் படுத்தப்படும் வார்த்தைகள் 10. அவை The, of, and, a, to, in, is, you, that, it.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கட் சாதனையாளர் லாரா

கிரிக்கட் உலகில் பல சாதனைகள் படைக்கப்படுகின்றன. அவற்றில் பல அடிக்கடி முறியடிக்கப்படுகின்றன. சில நீண்டகாலம் நிலைத்திருக்கின்றன. விசேடமாக 'டெஸ்ட்' பந்தயங்களில் 36 வருடங்களாக முறியடிக்கப்படாமல் இருந்த ஒரு சாதனை கடந்த ஏப்ரல் மாதம் முறியடிக்கப்பட்டது. மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த 'கிரிக்கட் ராஜா' என வர்ணிக்கப்படும் சேர் ஹறி சோபர்ஸ் அவர்களால் 1958ம் ஆண்டு, பாகிஸ்தான் கோஷ்டிக்கு எதிராக, கிங்ஸ்ரன் மைதானத்தில் ஆட்டமிழக்காது எடுக்கப்பட்ட 365 ஓட்டங்களே, தனிநபர் ஒருவரால் எடுக்கப்பட்ட அதிகூடிய ஓட்டங்களாகும். இச்சாதனையை மேற்கிந்திய தீவுகள் கோஷ்டியைச் சேர்ந்த பிறைன் லாரா அன்ரிகுவா சென்ஜோன்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து கோஷ்டிக் கெதிராக 45 பவுண்டரிகளின் உதவியுடன் 375 ஓட்டங்களைப் பெற்று முறியடித்தார். சாதனை முறியடிக்கப்பட்டதும் மைதானத்தினுள் சென்று முதன் முதலில் பாராட்டியவர் சேர் சோபர்ஸ் ஆவர். இதன் மூலம் விளையாட்டின் மகத்துவத்தை பேணிக்காத்துள்ளார் இந்த சோர்பஸ்.

லாராவைப் பொறுத்தவரையில் இது 16 டெஸ்ட்களில் பெறப்பட்ட மூன்றாவது சதமாகும். இச்சாதனை நிலைநாட்டிய பின்னர் பத்திரிகையாளரின் கேள்விக்கு பதிலளித்த லாரா; 1993ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் தான் பெற்ற 277 ஓட்டங்களே தனக்கு பிடித்த ஆட்டமாகும் என்றார். சிறுவயதில் சக நண்பர்களுடன் துடுப்பாட்டத்தில் ஈடுபடும்போது இவரை ஆட்டமிழக்கச் செய்வது கடினமாக இருந்ததால், இவருக்காக ஒரு புதிய விதியை அமுல் செய்தனர். அதாவது ஒரு பந்தை இவர் அடிக்காது விக்கட் காப்பாளரிடம் விட்டால் 'அவுட்' என்பதாகும். இவரது சொந்த இடமான டிரினாட் அரசு, மாளிகை பேன்ற வீட்டையும், புதிய வாகனம் ஒன்றையும் பரிசளித்து கௌரவித்துள்ளது. அவரது வருமானம் இந்த ஒரு இன்னிங்சினால் பலமடங்கு அதிகரித்துள்ளது.



இங்கிலாந்தில் நடைபெறும் உள்ளூர் அணிகளுக்கான கிரிக்கட் போட்டிகளில் வாவிக்சயர் (Warwickshire) அணிக்கு விளையாடும்போது இன்னொரு உலகசாதனையை நிலைநாட்டினார். முதலாவது உலகசாதனை நிலைநாட்டி சரியாக 50வது நாள் ஆட்டமிழக்காது 501



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டங்களை இவர் பெற்றார். அதுவரை பாக்கிஸ்தானைச் சேர்ந்த ஹனிப் முகமட் அவர்களினால் நிலைநாட்டப்பட்ட 499 ஓட்டங்களே சாதனையாக இருந்தது. முதல் தர கிரிக்கட் ஆட்டத்தில் உலகத்தில் தனிநபர் ஒருவரால் எடுக்கப்பட்ட அதிகூடிய ஓட்டம் இந்த 501 ஆகும். 25 வயதுடைய இவர் மிகவும் நிதானத்துடனும் தேவையேற்படின் விரைவாக ஓட்டங்களைக் குவிப்பதில் வல்லவராகவும் இருக்கிறார்.

உலக அரங்கத்தில் எதிர்வரும் காலங்களில் மேலும் பல இளம் வீரர்களை கிரிக்கட் உலகம் காணும் என்பதில் ஐயமில்லை. இந்தியாவுக்கு ஒரு சச்சின் டென்லுக்கார், பாகிஸ்தானுக்கு ஒரு இன் சு மாமும் ஹக் போன்றவர்களால் மேலும் போட்டிகள் பலம்பெறும் சாதனைகள் நிலைநாட்டப்படும் என எதிர்பார்ப்பதில் நியாயம் இருக்கின்றது.

★★★

## ~ வாசு ~

● அண்மையில் நியூசிலாந்துக்கு விஜயம் செய்த மேற்கிந்திய தீவுகள் கிரிக்கட் கோஷ்டி நியூசிலாந்து அணியை 1-0 ரீதியில் 2 டெஸ்ட் தொடரை வெற்றி கொண்டுள்ளது.

● கிரிக்கட் டெஸ்ட் பந்தயங்களை விளையாடும் நாடுகளில் மிகவும் இளைய அங்கத்துவ நாடான ஸிம்பாபே அணி தனது 11வது டெஸ்டில் வெற்றியைச் சந்தித்துள்ளது. ஸிம்பாபே பாக்கிஸ்தான் அணியை 1 இனிங்ஸ் 64 ஓட்ட வித்தியாசத்தில் தோற்கடித்து சாதனை புரிந்துள்ளது. 3 டெஸ்ட் ஆட்டத் தொடரில் பாக்கிஸ்தான் அணி 2:1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

● சுகவீனம் காரணமாக ஓய்வெடுத்துக் கொண்ட மேற்கிந்திய தீவுகள் கிரிக்கட் அணித்தலைவர் றிச்சி றிச்சாட்ஸன் மீண்டும் கிரிக்கட் அணித் தலைவராக அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான போட்டிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

● பிரான்ஸ் நாட்டுப் பிரஜையான உதைபந்தாட்ட வீரர் கற்றனா இங்கிலாந்திலுள்ள மன்செஸ்டர் யுனைற்றட் அணியின் சார்பில் விளையாடிய போது பார்வையாளர் ஒருவரை உதைத்ததன் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு 40,000 அமெரிக்கன் டாலர்கள் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

● உதைபந்தாட்ட உலகில் பாலை-வனத்துப் பீலே (Pele) என்று அழைக்கப்படும் சவுதி அரேபிய வீரர் மஜீத் அப்துல்லா இதுவரை 147 சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை புரிந்துள்ளார். இதன் மூலம் முன்னாள் இங்கிலாந்து கோல் காப்பாளர் பீற்றர் (F)பில்ரனின் சாதனையை முறியடித்துள்ளார்.

● 1996 இல் அத்திலாந்தாவில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதற்கு 33 வயதுடைய பிரபல விளையாட்டு வீரர் கார்லூயிஸ் ஆர்வம் காட்டி வருகின்றார். இதுவரை 8 ஒலம்பிக் தங்கப் பதக்கங்களைப் பெற்ற இவர் 9 தங்கப் பதக்கங்களைப் பெற்று நூர்மீயின் (Nurmi) சாதனையை முறியடிப்பார் என விளையாட்டு ரசிகர்கள் நம்புகின்றனர்.

### உங்களுக்குத் தெரியுமா?

உலகின் மிகப்பெரிய இதயம் கொண்ட விலங்கு, நீலத் திமிங்கலம் தான், இதன் இதயத்தின் எடை 700 கிலோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான விளம்பர உத்திகள்

நடா. R. ராஜ்குமார்

விளம்பரம் என்பது தனித்துவமான கலை. கீழைத்தேய நாடுகளுடன் ஒப்பிடும் போது மேலைத்தேய நாடுகளில் இந்த விளம்பரங்களுக்காக சில வியாபார ஸ்தாபனங்கள் கோடிக்கணக்காக செலவு செய்வதுமுண்டு. இந்த விளம்பரங்களை உருவாக்குவதற்கென்றே சில நிறுவனங்கள் தனிப்பட்ட முறையில் இயங்குகின்றன. இந்த நிறுவனங்களால் உருவாக்கப்படும் விளம்பரங்களால் பொதுமக்கள் கவரப்பட்டு விளம்பரம் செய்யப்படும் பொருட்களை என்ன விலைகொடுத்தாவது வாங்குவதற்குத் தூண்டப்படுகிறார்கள். இதனால் உற்பத்தியாளர்களான பெரும் முதலாளிகள் அல்லது பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் ஆகியோர் பெருமளவு பணத்தை இலகுவாகச் சம்பாதிக்க முடிகிறது. விளம்பர உத்திகளை சரியாக கணக்குப் பண்ணி, உரிய முறையில் தகுந்த இடத்தில் பாவிக்கத் தவறும் பட்சத்தில் அத்தகைய விளம்பரங்களால் லாபத்துக்குப் பதில் நஷ்டமே ஏற்பட வாய்ப்பு அதிகம்.

ஒரே பொருளை வெவ்வேறு வடிவங்களில், அல்லது அதேபோன்று விற்பனை செய்யும் வியாபார நிறுவனங்களுக்கிடையே ஏற்படும் கடும் போட்டியால் விளம்பரங்களுக்குத் தேவை அதிகமாகிறது. அண்மையில் ஒரு செய்தி விளம்பரம் பார்த்தேன். மிக நுட்பமாக இருந்தது. TORONTO வில் செய்தி வானொலிகளில் ஒன்றான AM 680 அந்த விளம்பரத்தை விளம்பரப் பலகையில் பெரிய அளவில் பாவித்திருந்தது. அதாவது வெறும் வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் GLOBAL MAIL பத்திரிகையை அச்சிட்டு அதன் கீழ் YESTERDAY'S NEWS என்று எழுதிவிட்டு, அதற்கு அருகிலே 680 AM என்று எழுதிவிட்டு TODAY'S NEWS என்று விளம்பரப்படுத்தியிருந்தது. இது எப்படி சாத்தியம் என்று மண்டையைப் போட்டுக் குழப்ப வேண்டியதில்லை. ஏனெனில் அதில் கூறப்பட்டுள்ள செய்தி உண்மையானதே. ஆனால் விளம்பரத்தில் சட்டநுணுக்கங்கள் பாவிக்கப்படுமிடத்து சில வேளைகளில் GLOBAL MAIL நிறுவனமும் 680 AM நிறுவனமும் நீதிமன்றம் வரை செல்லவும் வாய்ப்பும் உண்டு. இப்படியான விளம்பரங்களுக்கு விளம்பர விதிகள் எப்படி இடமளிக்கின்றன என்பதிலேயே யாவும் தங்கியுள்ளது. ஆகவே விளம்பர தாரர்களும் விளம்பரம் செய்பவர்களும் விளம்பர சட்ட திட்டங்களை நன்றாகப் புரிந்து வைத்துக் கொண்டு விளம்பரம் செய்தால் வெற்றிதான்.

ஒலி, ஒளிபரப்புத் துறையோடு சம்பந்தப்பட்டவன் என்ற முறையில் இத்தகைய விளம்பரங்கள் பற்றி சற்று மேலோட்டமாக நோக்குவோம். கனடாவில் நமது சமுதாயத்தினரின் மத்தியில் தோற்றமெடுக்கும் வியாபார முயற்சிகளுக்கு விளம்பரம் செய்வதில் மிக முக்கியமானவை வானொலிகளும் பத்திரிகைகளுமே. வானொலிக்கென ஒரு விளம்பரத்தை அமைக்கும் போது அதற்குரிய பிரதியமைத்தல் ஒரு தனிக்கலை. சிலருக்கு நிறைய விடயம் தெரிந்திருக்கும். ஆனால் அதைச் சரியாக சொல்லத் தெரியாமல் இருக்கும். சரியாகச் சொல்லாத விளம்பரத்தால் எந்தப் பயனும் இல்லை. விளம்பரங்களில் சரியான விளம்பரங்கள் சொல்லப்பட வேண்டும். எளிமையாகவும், இனிமையாகவும், கவர்ச்சியாகவும் சொல்லப்பட வேண்டும். வானொலிகளில் சில குறிப்பிட்ட விளம்பரங்கள் ஒலிபரப்பப்படும் போது அதைக் காத்திருந்து ரசித்த நேயர்களை நான் கண்டிருக்கிறேன். இதுவே அந்த விளம்பரத்தின் வெற்றிக்கு சரியான சாட்சி.

இங்கே அநேகமான வியாபார ஸ்தாபனங்கள் விளம்பரம் செய்யும்போது ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் எல்லா விளம்பரங்களையும் சொல்லவேண்டுமென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைப்பில் குறுகிய நேரத்திற்குள் அதிக விளம்பரங்களைச் சேர்க்கப்போய் விளம் பரங்களின் தரத்தைக் குறைக்க வழி செய்து விடுவதுண்டு. இது தவறு என்பதே என் கணிப்பு. முக்கியமான சில விடயங்களை அழகாக, கவர்ச்சியாக, உண்மையாக சொல்லும் போது அதற்கு மதிப்பு தனி. இத்தகைய விளம்பரங்களின் வெற்றியும் உறுதியானது.

விளம்பரங்களின் துரித வெற்றிக்கு மிக முக்கியமானது சரியான IDEA க்களே! இந்தத் துறையில் தினமும் சுற்றி வருப வர்களுக்கு இந்த IDEA க்கள் மிக சுலபமாக கைகூடி வருவதுண்டு.

உதாரணமாக எமது கீதவாணி ஒலிபரப் பில் பாவிக்கப்படும் அநேகமான நிகழ்ச் சித் தலைப்புகள் இலங்கை வானொலியை ஒத்திருக்கும். (உ-ம்) பொங்கும் பூம்புனல்.

இவர்கள் ஏன் இலங்கை வானொலியைக் கொப்பி அடிக்க வேண்டும். (Copy அடித் தல்- அதேமாதிரி பின்பற்றுதல்) இவர் களிடம் சொந்தமாக IDEA இல்லையா? என்று சில புத்திசாலி விமர்சகர்கள் தலையை பிய்த்துக் கொண்டு ஓடித்திரியக் கூடும். காரணம் இதுவும் ஒருவகை வியா பாரத் தந்திரமே! புதிய இசையைப் போட்டு அதை PROMOTE பண்ண எடுக் கிற கால எல்லையை விட, மக்களுக்கு நன்கு பழக்கப்பட்ட அந்த இசையைக் கேட்டவுடன் தமது பழைய நினைவுகளை ஒருமுறை திருப்பி நினைத்துக் கொள்வார் கள். குறுகிய காலத்தில் கூடிய வெற்றி. இப்போ புரிகிறதா?...

இன்னுமொரு வேடிக்கையைப் பாருங்கள்! சில விமர்சனங்கள் எப்படி விளம்பரமா கின்றன என்பதை ஒரு குறிப்பிட்ட நபரை பற்றியோ, குறிப்பிட்ட நிறுவனத்தைப் பற்றியோ ஆகா ஓகோ என்று எல்லோ ரும் விமர்சனப்படுத்தும் போது தினமும் அதைப் பார்க்கின்ற பார்வையாளர் களுக்கு ஒருவித சலிப்பு ஏற்பட வாய்ப் புண்டு. இங்கே ஒரு TURNING POINT தேவை. ஆகவே சில விமர்சனங்களை கன்னா பின்னாவென்று எழுதி சில பத்திரிகைகளுக்கு அனுப்பிவிடுவார்கள் சிலர். உண்மைக்குப் புறம்பான இந்த விமர்சனங்களை அந்தப் பத்திரிகைகளும் இதோ நான் மட்டுமே 'பத்திரிகை ஜன நாயகத்தை' கடைப்பிடிக்கிறேன் என்று கண்ணை மூடிக் கொண்டு பிரசுரித்து விட அது 'கிளிக்' அகி பார்வையாளர்களை உங்கள் பக்கம் திருப்பிவிடும். (இந்த யுக்தியை சம்பந்தப்பட்ட நிறுவனங்களே சில வேளைகளில் செய்வதுண்டு. அல் லது அந்த நிறுவனங்களின் வளர்ச்சியில் பொறாமை கொண்ட சில நண்பர்களும் இப்படி எழுதி உதவுவதுண்டு.

குறிப்பு: தமிழகத்து அரசியல்வாதிகளுக்கு இது கைவந்த கலை. சினிமாக்காரர்கள் தங்கள் மார்க்கட் சாய்கின்றபோது சில கிசு கிசுக்களின் மூலம் அதை நிவர்த்தி செய்வதும் உண்டு.) ஆகவே... மொத் தத்தில் இப்போது பார்வையாளர்களை திருப்பியாயிற்று. இனி உங்கள் வியா பாரத்தை தரமாக செய்யுங்கள். இப்போது வெற்றி... வெற்றிதான். ஆகவே... இதுவும் ஒருவகை சுவாரஸ்யமான வியாபார யுக்தியே.

பி. குறிப்பு (விளம்பரம் என்பது ஒரு தனித்துவமான துறை. நிறைய விடயங் களை உள்ளடக்கியது. மேலோட்டமான கட்டுரை என்பதால் அநேக விபரங்களைச் சேர்க்க முடியவில்லை. மன்னிக்கவும்)

★★★

## உங்களுக்குத் தெரியுமா?

உலகின் மிகப்பெரிய சுரங்க ஏரி அமெரிக்காவில் டென்னிசி மாகாணத்தில் கிரைக்கெட் காவென்ஸ் என்ற இடத்தில் உள்ளது, பூமிக்கு அடியில் 270 அடி ஆழத்தில் உள்ள இந்த ஏரி 1.8 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் அமைந்துள்ளது. "லாஸ்ட் சீ" என்று அழைக்கப்படும் இந்த ஏரி 1905இல் தான் கண்டுபிடிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதிலீலாவதி

சென்ற தைப்பொங்கல் வெளியீடுகளாக ஏழு திரைப்படங்கள் ரொறன்ரோவிலுள்ள தமிழ்த் திரையரங்குகளில் காண்பிக்கப்பட்டது. அந் தப் படங்களை வரிசைப்படுத்தியதில் இரண் டாம் இடத்தை பிடித்துக்கொண்டது 'சதிலீலா வதி' கமலின் தயாரிப்பில் பாலுமகேந்திரா இணைந்து ஒரு நல்ல நகைச்சுவையான ஜனரஞ்சகப் பொழுது போக்குப் படத்தை படைத்துள்ளனர்.

இன்று கமலின் படம் என்றாலே அவரிட மிருந்து ஒரு வித்தியாசமான எதிர்பார்ப்பு வந்து விடுகின்றது! நாம் எதிர்பார்க்கின்ற நடிப்பைக் காட்டிலும் அதிகமாக வழங்கி விடுவதும் அவரது வழக்கம். இது கமலின் படம். ஆனால் இப்படத்தின் கதாநாயகன் ரமேஷ் அரவிந்த். இரண்டாம் கதாநாயகனா கவே கமல் தோன்றியுள்ளது குறிப்பிடத் தக்கது.

ஒரு நல்ல ஆழமான சப்ஜக்ட்டை இப்படத் தின் மூலம் நகைச்சுவையுடன் சொல்லி யிருக்கிறார்கள். சந்தர்ப்பவசத்தால் தன்னை விட்டுப்பிரிந்து இன்னொரு பெண்ணுடன் சென்ற கணவனை மீட்ட மனைவியின் கதை இது. மனசை புரிந்து கொள்ளாது பணத்தை காதலிக்கும் பெண்களுக்கு நல்ல படிப்ப னையைக் கொடுக்கின்ற படம். நாம் எந்தக் காரியங்களைச் செய்யும்போதும் முன்னரே சிந்தித்து செயல்பட வேண்டும். இல்லா விடில் பின்னர் எம்மை மீட்டுக் கொள்வது எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுகின்ற நல்ல கதை. அனந்து வின் இக்கதைக்கு, கிரேஸி மோகன் வசனம் எழுதியிருக்கிறார். காமெடி வசனம் எழுதுவதில் கிரேஸி மோகன் 'கிரேட்'.

பெரும் ஆர்ப்பாட்டமில்லாத டாக்டராகவும், பெரும் அறுவைக்காரர் போல கமல் நடிக் கிறார். 'கொங்குநாட்டு' தமிழ் பேசி கமல் இப்படத்தில் கலகலக்க வைத்துவிட்டார், குலுங்கக் குலுங்கச் சிரிக்கவும் வைத்து விட்டார். கமல் கோவை சரளாவுடன் நடிக்கிறாரா என்று ஆச்சரியப்பட்டவர்கள் 'சதிலீலாவதி' படத்தைப் பார்த்தவுடன் மௌனித்துப்போவார்கள். கொங்கு தமிழை இருவரும் பேசி ஜமாய்த்துவிட்டார்கள்.

## சினிமா... சினிமா...

கமல் நடிக்கிறார் என்ற பிறகு ரமேஷ் அரவிந்த் இரண்டாம் பட்சம் தானே என்று எண்ணத்தோன்றும்! ஆனால் ரமேஷ் உம் காமெடி செய்து, சமாளிப்புகள் செய்து இயல்பாக நடித்து பாராட்டைப் பெறு கின்றார். மனைவியிடமும், காதலியிடமும் சிக்கி உண்மைகளைச் சொல்லமுடியாமல் அவதிப்படும்போது ரமேஷின் நடிப்பு பாராட்டத்தக்கது.

ரமேஷின் மனைவியாக கல்பனாவும், காதலி யாக ஹீராவும் தோன்றியுள்ளனர். கல்பனா வுக்கு 'சின்ன வீடு' படத்தில் அவர் ஏற்று நடித்த அதே பாத்திரம். கணவனைத் திருத்தும் கிளைமேக்ஸில் சூடான நடிப்பு.

ரமேஷின் காதலியாகத் தோன்றினாலும் ஹீரா ஒரு வில்லி மாதிரித் தோன்றாமல் கிட்டத்தட்ட கதாநாயகியாகவே வருவதும், ஒயிலான தோற்றமும், நடிப்பும் ரசிக்கத் தகுந்ததாக அமைந்துள்ளது.

ராஜா, செக்கலிங்க பாகவதர், மதன்பாப், குட்டி ஆனந்த், பேபி மேனிஷா, மாஸ்டர் ரதிம் ஆகியோரும் தமது பாத்திரத்தைக் நன்கு நடித்துள்ளனர்.

நகைச்சுவை நடிகர்கள் இல்லாமலே படம் நகைச்சுவையாக, சலிக்காமல் ஒரு நல்ல பொழுது போக்கு படமாக இருந்தது. பாடல் கள் அதிகம் இல்லை. இசைஞானி இளைய-ராஜா படத்திற்கு இசையமைத்திருக்கிறார். கமல், சித்திரா பாடியுள்ள 'மாருகோ மாருகோ' பாடல் ஜனரஞ்சகமான பாட்டு.

ஒளிப்பதிவைப் பொறுத்த வரையில் "சதி லீலாவதி" ஓர் அருமையான படம். பாலு-மகேந்திரா செலுலொயிட்டில் அற்புதமாய் ஓர் ஓவியம் வரைந்திருக்கிறார். ஒளிப்பதிவுத் துறையில்; 'இருக்கின்ற வெளிச்சத்தை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் பயன்படுத்தி ஒளிப்பதிவு செய்வது ஓர் நவீன வடிவம். தற்போது வெளிவருகின்ற ஏராளமான ஹாலிவூட் படங்கள் இத்தகைய 'கிடைக்கின்ற வெளிச்ச' (available light) ஒளிப்பதிவையே அதிகம் பாவிக்கின்றனர். பாலுமகேந்திரா இந்த வடிவத்தையே சதிலீலாவதியில் முழுவதும் பயன்படுத்தி இருக்கின்றார். இப்படியான வகையில் ஒளிப்பதிவு அமையும் போது கதை ஏதோ கற்பனை உலகில் நடைபெறுவது போன்று தோன்றாது கதை நம்முடைய வழமையான வீடொன்றில் நடைபெறுவது போன்று இருக்கும்.

உதாரணமாக ஹீராவின் வீட்டிற்கு பிறந்த நாளுக்கு செல்லும் ரமேஷ் அரவிந்த் உணவருந்தும் ஷாட், சாப்பாட்டு மேசைக்கு மேலுள்ள Shaded bulb மட்டுமே இங்கு வெளிச்சம் தர பயன்படுத்தப்படுகிறது. மேலிருந்து அறை காட்டப்படும் போது Shade மறைக்கும் பகுதி இருளாகவும், கீழே வரும் போது ஒளி கூடியும் தெரிவதுடன் நாயகன், நாயகி நிழல் கூட வழமையான ஒரு வீட்டை நினைவூட்டுகிறது. (வழமையாக திரைப்படங்களில் மென்மைப்படுத்திய ஒளியை பாவித்து நிழலை இல்லாது செய்து விடுகிறார்கள்)

நாயை மறந்து விட்டு மீண்டும் நாயகி வீட்டிற்கு வரும் நாயகன் கதவைத் தட்டும் போது சுவரில் இருக்கும் bulb மட்டுமே ஒளி முதலாகிறது. நாயகனின் நிழல் கூட கதவில் இருப்பது, அநேகமான விளக்குகள் அணைந்து ஒரு விளக்கு எரிவது போன்றும், இரவு 11 மணி என்பதையும் நினைவுபடுத்துகிறது.

மீண்டும் வீடு திரும்பும் ரமேஷ் அரவிந்தும், கல்பனாவும் படுக்கையறையில் உரையாடும் காட்சியில் Table lamp பிலிருந்த வெளிச்சமே பாவிக்கப்படுகிறது. கல்பனா தலையணைக்கு உறை மாற்றும் போது நிழல் சுவரில் மெதுவாகத் தெரிவதில் அது பின்னிரவு நேரம் என்பதை காண்பிக்கிறார்.

மேலும் படத்தில் பெரும்பாலும் யன்னல் ஒரு முக்கிய இடம் பெறுவதை நீங்கள் பார்த்திருக்கலாம். யன்னலூடாக வரும் மென்மைப்படுத்தப்பட்ட ஒளி புகைப்படத் துறையில் ஓர் அற்புதம். அதிக நிழல் இருக்காது அரைவாசி ஒளியும் மறுபாதியில் மெல்லிய நிழலாகவும், ஒரு முகம் தெரியும் போது அது நிபுணத்துவம் பெற்ற ஒளியமைப்பை காட்டி நிற்கும்.

இதை பாலுமகேந்திரா படம் முழுவதும் பாவித்திருக்கிறார். பகல் நேரக்காட்சிகள் ஜன்னலூடாக வரும் ஒளியிலேயே அமைக்கப்பட்டுள்ளன. அலுவலகக் காட்சிகள் கூட இந்த வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளது விந்தைதான்.

'ராஜ்ஜனோடு ராணி' பாடல்காட்சி முகில் கூடிய ஒரு நாளில் (Cloudy day) படமாக்கப்பட்டுள்ளது. சிலைகளின் பரிமாணங்களில் நாயகன், நாயகி ஒரு வித்தியாசமான சிந்தனை. வழமையாக backround என்பது அதிகம் சிக்கலில்லாத (Simple) ஒரு பின்னணி. அதிகம் முக்கியத்துவமில்லாமல் Subjectக்கு முக்கியத்துவம் வரக்கூடிய வகையில் அமைந்திருக்க வேண்டுமென்பது ஒளிப்பதிவில் ஒரு முறை. அநேகமாய் அநேக வர்ணங்கள் கலந்து ஒரு சிக்கல் தன்மையில்லாமல் இருக்கும் இதிலும் அவ்வகையிலே முழுவதும் சிலையாக, நாயகன் நாயகி மட்டும் அசையும் போது பாலு-மகேந்திராவின் கற்பனை ஒரு வித்தியாசம் தான். இதே போன்று ஏற்கனவே சில பாடல்காட்சிகள் படமாக்கப்பட்டிருந்தாலும் இதில் ஒரு வேறுபாட்டை அவதானிக்க முடிகின்றது.

கடற்கரையில் ஹீரா, ரமேஷ் அரவிந்த் நடந்து போகும் காட்சியில் நாயகன், நாயகியை விட மேகம் முதன்மை பெறுகிறது. நாயகன், நாயகி சிறுகி இருளாகி விடுகிறார்கள். இது SIthouette shot எனப்படும். வரவிருக்கும் இருநாட்களை நினைவுபடுத்தும் காட்சியாக இதை எடுத்துக் கொள்ளலாம்.

மொத்தத்தில் பாலுமகேந்திரா என்ற கலைஞன் ஒரு எட்டாத தொலைவில் சென்று செய்கின்ற விந்தைகளை நாம் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதை தமிழ் சமுதாயம் எந்தளவு விளங்கிக் கொள்ளப் போகிறது என்பது இங்குள்ள ஒரு கேள்வி.

இப்படத்தின் மூலம் கலை நயத்துடன், நல்ல ஜனரஞ்சக பொழுது போக்குப் படத்தையும் தன்னால் தரமுடியும் என்பதை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார் பாலுமகேந்திரா.

'சதிலீலாவதி' பாலுமகேந்திராவுக்கு புதிய முயற்சி. இத்தகைய வித்தியாசமான, தரமான, ஆரோக்கிய நகைச்சுவைப் படங்களை அவர் தொடர்ந்து தர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்தில் கமலின் புதுபடமான 'இந்தியன்' துவக்க விழா ஏ.வி.எம் ஸ்டுடியோவில் நடைபெற்றது. எழுத்தாளர் சுஜாதா, ஏ.ஆர். ரகுமான், கமல், டைரக்டர் ஷங்கர் என ஒரு முற்போக்கு கூட்டணி இணைந்திருக்கிறார்கள். "இது ஒரு வித்தியாசமான க்ரைம் சப்ஜெக்ட்" என்கிறார் ஷங்கர். படம் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

~ தரன் - கருணா ~

*முயன்றுபாருங்கள்!*

**மூ _ _ _ _ ம்**

இது ரஜனி நடித்த படங்களில் ஒன்று...

சென்ற இதழில்....

**கடலோர கவிதைகள்**



சினிமா சினிமா கேள்வி:

*சமீபத்தில் வெளியான இந்த படத்தின் கதை, திரைக்கதை, ஒளிப்பதிவு & டைரக்ஷன் செய்து, B.R. விஜயலட்சுமி 'ஆசியாவின் முதல் பெண்மணி' ஆகிறார். படம் எது?*

*உங்கள் பதில்களை ஏப்ரல் 05, 95க்கு முன்னர் கிடைக்கக்கூடியக அனுப்பிவையுங்கள்*

சென்ற இதழுக்கான சினிமா சினிமா பதில்:

*'இளையராஜாவின் மகன் கார்த்திக்ராஜா'*

$25 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி: **க. செந்தில்** *(ரொறன்ரோ)*

# சிதறிய செய்திகள்

## கோவிந்தா!

இலங்கைத் தேர்தல் சட்டப்படி ஜனாதிபதி வேட்பாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கட்சி ஒன்றின் பொதுச் செயலாளர் மட்டுமே கட்டுப்பணத்தை மீளப் பெறமுடியும். கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட காமினி திஸாநாயக்காவும் ஐ.தே.க. பொது செயலாளர் காமினி விஜய சேகராவும் தற்பொழுது உயிருடன் இல்லை. அதனால் வைப்புப் பணம் 50,000 ரூபாயும் கோவிந்தா!

## மூடப்படுமா?

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சுமார் ஆயிரம் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கான வசதியிருந்தும் இந்த வருடம் 25 ஆசிரிய மாணவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர்.

## தடா சட்டம் நீக்கம்

விசாரணையின்றி சந்தேக நபர்களை பாதுகாப்பில் தொடர்ந்து வைத்திருக்க வழி செய்யும் தடா சட்டத்தை நீக்கி விடுவதற்கு இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

## கையில் தொப்பி எதற்கு?

இந்த வருடம் மே 7ம் திகதி பிரான்ஸில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதமர் எட்வார் பலதூர் அமோக வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. எவருடனும் நட்பு ரீதியாக நெருங்கிப் பழகும் தன்மை அற்றவரான பலதூர் வாக்காளர்களுடன் கைகுலுக்குவதை தவிர்ப்பதற்காக தொப்பியை கழட்டிக் கையில் வைத்துக் கொள்வாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிகள் துருப்பிடிப்பதில்லை

~ சக்கரவர்த்தி ~

வாழ்வில் எனக்கு
அம்மா அப்பா
உற்றம் சுற்றம்
நண்பர்கள்
காதலிகள் என்று
இவர்கள் எவரோடும்
சண்டையில்லை

என்
விரோதம் எல்லாம்
விரோதிகள் மீதுதான்!

நடு இரவில்
தட்டி எழுப்பி
தலை மாத்திரமே ஆட்டும்
மானிடப் பொம்மைக்கு
முன் நிறுத்தியவனும்
என் விரோதியாகான்.

என்
விரோதம் எல்லாம்
விரோதிகள் மீதுதான்!

இன்னும் ஓர்தடவை
விளையாட்டுக்கேனும்
எவரோடும்
விரோதிப்பதாய்
ஸ்நேகிப்பதாய்
நான்
சொப்பனம் கூட
காண்பதாய் இல்லை.

உங்களைப் போலும்
என்னைப் போலும்
என் விரோதிகளும்
ஏதோ ஓர்
குளிர் தேசத்தின்
தலை பட்டணத்தில்....

எந்த ஒரு நாட்டின்
அனுசரணையின் அணைப்பில்
பிரஜா உரிமையானாலும்
சொந்த நாட்டின்
கத கதப்பு
இன்பமாயிருப்பினும் - இல்லை
துன்பமாகவே இருப்பினும்
போய் மீண்டும் சேருதலே
புலம்பலாகிப் போனது.

காலம் காலமான
வாய் சொல்
வைராக்கியமாகினும்
உங்களைப் போலவே
என் விரோதிகளும்
என்றேனும்
ஊர் திரும்புதலே
உணர்வோடு ஊறின
உண்மை அல்லது பொய்
ஆகிப் போனது.

வாழை மரங்களும்
வீர மரணங்களும்
ஓய்ந்து இல்லாது
போனாலும் -
வீதி நெடுக்க
விழுந்து விட்ட
விழுகின்ற பள்ளங்கள்
முழுதாய் நிரம்பினும் -

கபலத்தில்
துளை இனி
ஒருபோதும் விழாது எனும்
சாசனம்
பிரகடனமானாலும்

தின்பது மாத்திரம் அல்ல;
வாயால்
பேசவும் பாடவும் கூட
அனுமதி உண்டென்றும்
உண்மை உணரப்படினும்
நான் மாத்திரம்
எந்த ஒரு பொழுதிலும்
நம் அன்னையர் தேசம்
மீண்டும் திரும்புவதாய்
உத்தேசம் இல்லை.

மசகு எண்ணை
ஏகமாய்த் தடவி 'பொலித்தீன்'
போர்வைக்குள்
ஆள் உயர ஆழத்தில்
பத்திரப்படுத்தப்பட்டிருக்கும்
துப்பாக்கிகள்
துருப்பிடிப்பதில்லை என்பது
என் விரோதிகளைப் போலவே
எனக்கும் ஐதீகம்!

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது வந்த பொடியன் வெளிநாட்டுக் குப்போனால் வெளிநாட்டுப் பெட்டையைக் கட்டிக் கொண்டு திரும்பி வராமல் அங்கேயே இருந்து விடுவான் என்ற பயத்தில் "நீ ஜெர்மனிக்குப் போகுமுன்னர் கலியாணத்தைக் கட்டிப்போட்டுப் போ" என்றனர் அப்பாவும், அம்மாவும். "கலியாணத்துக்கு இப்போ என்ன அவசரம். கலியாணம் கட்டினால் படிக்கக் கொள்ள முடியாது. நான் இரண்டு வருசத்துல படிப்பை முடித்துக் கொண்டு வந்த பின்னர் அதைப்பற்றி யோசிக்கலாம்" என மறுத்துவிட்டான் அந்தோனிப்பிள்ளை சேவியர்.

கொழும்பிலுள்ள பிரபல கல்லூரியொன்றில் இரசாயனவியல் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்த சேவியருக்கு ஜெர்மனிக்குச் சென்று 'கெமிக்கல் எஞ்ஜினியரிங்' படிப்பதற்கான புலமைப் பரிசில் கிடைத்திருந்தது. வேறு வழியின்றி அந்தோனியரை வேண்டிக் கொண்டு மகனை ஜெர்மனிக்கு வழியனுப்பி வைத்தார்கள் பெற்றோர்.

ஆங்கிலம் சர்வதேச மொழியென்ற நம்பிக்கையுடன் ஜெர்மனிக்குச் சென்ற சேவியருக்கு பெறும்பாலான ஜெர்மனியர்களுக்கு ஆங்கிலமே தெரியாமல் இருப்பது ஆச்சரியமாக இருந்தது. முற்றிலும் மாறுபட்ட புதிய சூழலுக்கேற்ப தன்னை சுதாகரித்துக் கொண்டு படிப்பில் அக்கறை செலுத்தினான். மந்த வேகத்தில் மாதங்கள் நகர்ந்தன. வெள்ளிக் கிழமையன்று வழமைபோல் இரவு ஒரு மணிவரை படித்துக் கொண்டிருந்து விட்டு படுத்தவன் சனிக்கிழமை காலை பத்து மணியாகியும் படுக்கை விட்டெழும்ப மனமின்றி சுவரில் தொங்கிய அந்தோனியாரின் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவரின் தலையில் முள்முடி அறையப்பட்ட இடங்களிலிருந்து இரத்தம் கசிவதைப் பார்த்த பொழுது ஆமிக்காரனின் சித்திரவதைக்கு ஆளான ஒரு தனிமனிதனைப் போல் அந்தோனியார் காட்சி அளித்தார். துன்பத்திலிருந்து தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள முடியாத அந்தோனியாரினால் பிறரது துன்பத்தை எப்படிப் போக்க முடியுமென ஒரு கணம் சிந்தித்தான்.

திடீரென மிருதங்க வாத்தியத்துடன் யாரோ பாடும் சத்தம் கேட்டதும் ஆச்சரியம் அடைந்தவனாக கட்டிலை விட்டெழுந்து யன்னலூடாக வெளியே பார்த்தான். கருநாகம் போல் நீண்டு கிடந்த தெருவின் தொங்கலிலிருந்து ஒரு கூட்டம் 'ஹரே ராமா ஹரே கிருஷ்ணா' என பாடியபடி கூத்தாடிக் கொண்டு வருவதை கண்டான். உடனே இந்தியாவில் நிற்பதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது சேவியருக்கு. அவர்கள் தனது தொடர்மாடிக் கட்டிடத்தை தாண்டிச் செல்லு முன்னர் சென்றுபார்க்க வேண்டுமென்ற ஆவலில் விறுவிறென முகத்தைக் கழுவி உடுப்பை மாற்றிக் கொண்டு கீழே இறங்கி வந்து வாசலில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று அந்தக் கூட்டத்தையே பார்த்துக் கொண்டு நின்றான். மிருதங்கம், சல்லரி தாளம் ஆகிய பக்க வாத்தியங்களுடன் ஹரே ராமா ஹரே கிருஷ்ணா எனப்பாடு வதால் அவர்கள் தமிழர்களாகவோ வட இந்தியர்களாகவோ இருக்கலாமென எண்ணியவன் அவர்கள் வெளிநாட்டவர் களாக இருப்பதைக் கண்டு வியந்தான்.

மொட்டையடித்துக் காவியணிந்த ஆண் களும், தமிழ்ப் பெண்களைப் போன்று வெள்ளை நிறச் சேலை அணிந்து முக் காடு போட்டுள்ள ஜெர்மனியப் பெண் களும் அந்தரத்தில் தொங்கும் அங்கங்கள் எல்லாம் அறுந்து விழுந்து விடுமோ



என்று எண்ணுமளவுக்கு துள்ளிக் குதித் தாடுவதையும், உற்சாகத்தையும் ஒரு வித ஆகர்சனத்தையும் ஏற்படுத்தும் தாளவாத் திய இசையையும் பார்த்ததும் கிறிஸ்தவ னான அவனுக்கே தேகம் புல்லரித்தது. ஹரே ராமா ஹரே கிருஷ்ணா என வாய்க் குள் முணுமுணுத்துக் கொண்டே சேவிய ருக்கு அவர்களோடு சேர்ந்து தானும் ஆட வேண்டும் போலிருந்தது. அன்றிலிருந்து பிரதி சனிக்கிழமை தோறும் அவர்களுக் காக காத்து நின்று அவர்களோடு நெடுந் தூரம் வரை சென்று திரும்பி வருவான்.

பொழுது போக்குகள் எதுவுமின்றி நண்பர் களுமின்றி அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தவனுக்கு இதுவொரு நல்ல பொழுது போக்காகவும், மனத்துக்கு இதமாகவும் இருந்தது. அதனால் அவர்களது கோயில் இருக்கும் இடத்தைக் கேட்டறிந்து தினமும் கல்லூரி முடிந்ததும் மாலை வேளைகளில் அங்கு சென்று வந்தான். அங்கு வழங்கப் பட்ட ஆன்மீகத் துறை சம்பந்தமன ஆங் கிலப் பிரசவங்களும், மரக்கறி வகைகளு டனான பிரசாதமும் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அங்குள்ளோருடன் ஆங்கிலத்தில் உரை யாடக் கூடியதாக இருந்தமை அவனுக்கு


பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அத னால் படிப்படியாகப் படிப்பையேகைவிட்டு ஹரே ராமா இயக்கத்திலேயே சேர்ந்து விட்டான். அத்தோடு தன் பெற்றோரையும் மறந்து விட்டான்.

எத்தனையோ கடிதங்கள் எழுதியும் பதில் கிடைக்காததால் அவன் ஜெர்மனிப் பெட்டையைக் கலியாணம் செய்து கொண்டு தங்களையே மறந்து விட்டான் என எண்ணிக் கவலைப்பட்டார்கள் பெற்றோர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTERNATIONAL INSURANCE / FINANCIAL SERVICES
&
BST INSURANCE BROKERS
சர்வதேச காப்புறுதி + நிதிச்சேவை


**A.Veluppillai**
**(Life Consultant & Insurance Broker)**
**காப்புறுதி ஆலோசகர்**

*அழையுங்கள்:-*

**Tel: (416) 755-4849**
**Fax: (416) 755-8449**

**2425 Eglinton Ave. E.,**
**Suite. 217, Scarborough, Ont.**
**M1K 5G8**

Life Section - Under International Insurance Property Section- Under BST Insurance
கனடாவில் 9வருட காப்புறுதி அனுபவமுள்ள ஆலோசகர் எப்பொழுதும் சிறந்த தேவைகள் உங்களுக்குண்டு. சகல காப்புறுதி விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

Auto, Fire, Tenants, Boat Industrial, Casuality, Liability, Personal, Investments, Education Plans, Life, Health RRSP, Commercial, Disability, Travel, Mortgage, RRIF, Mutual Fund, Cash Back, Whole Life, Term Insurance, Segregated Fund, Family Insurance, Short Payment Plan

வாகனம், நெருப்பு, வீடு, குத்தகைக்காரர், படகு, தொழிற்சாலை, விபத்து, கடன், தனிப்பட்ட, மூலதனம், கல்வித்திட்டம், வாழ்க்கை, சுகாதாரம், வர்த்தகம், வலது குறைந்தோர், பிரயாணம், அடமானம், பணம் மீழல், வாழ்க்கை முழுவதும் காப்புறுதி தவணை வாழ்க்கை காப்புறுதி, குறிப்பிட்ட கால காப்புறுதி, குடும்ப காப்புறுதி, குறுகிய கால பணம் செலுத்தல்

We represent oldest, largest, leading, well managed mutual and stock insurance companies.
We shop around, the BEST for our client's needs, Affordability, and choice.

**We arrange all types of Insurance**

எம்மால் சகல வித காப்புறுதிகளும், உலகில் சிறந்த காப்புறுதி ஸ்தாபனங்களில் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன், உங்கள் விருப்பத்திற்கமைய, உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வண்ணம் ஒழுங்கு செய்து வழங்கப்படும்.

**ஆயுள் காப்புறுதி விசேட ஆலோசனைகள் உண்டு.**

Nine continuous years in Canadian Insurance Industry


ரோஜா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pillayar Traders

உங்கள் அனைத்து தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

## பிள்ளையார் ட்ரேடர்ஸ்

**3060 Lawrence Ave.E., Scarborough, ON.**
(at Lawrence & Markham)

**Tel: (416) 438-7746**

---

வாடிக்கையாளர்களின் நன்மைகருதி சகல வசதிகளுடன் புதிய இடத்தில்
தமிழ், ஆங்கில அச்சு தேவைகளுக்கு

Since 1991

## பரடைஸ் அச்சகம்

உங்கள் எண்ணத்தில் இருப்பதை அழகிய வர்ணத்தில்
தரமாகவும் விரைவாகவும் பெற்றிட பரடைஸ்

கண்ணை கவரும் அழகிய
திருமண அழைப்பிதழ்கள்
இலங்கை, இந்தியாவில்
இருந்து தருவிக்கப்பட்டு
மெளிரும் தங்கத்தால்
அச்சடித்து தருவதில்
பாரட்டுப் பெற்ற
ஸ்தாபனம்
பரடைஸ்

கலைவிழாக்களுக்கு
தேவையான சகல
விதமான விளம்பரங்கள்
நுளைவுச் சீட்டுக்கள்
புத்தகங்கள்
மற்றும் சகலவிதமான
அச்சுத் தேவைகளுக்கும்
நாடவேண்டிய
ஸ்தாபனம் பரடைஸ்

உங்கள் வியாபாரத்
தேவைகளுக்கான
தன்னறிமுக அட்டைகள்
விளம்பரங்கள், சீல்கள்
விலைப் பட்டியல்கள்
கடிதத் தலைப்புக்கள்
கிறாபிக் டிசைன்ஸ்
மற்றும் தேவைகளுக்கு
நாடுங்கள் பரடைஸ்

## Paradise Print Plus

COMPLETE PRINTING & GRAPHIC DESIGNS

1231 Ellesmere Rd, # 204, Scarborough, Ont.

**Tel:(416) 288-6449 Fax:(416) 288-0595**

ST


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு வருடங்களின் பின்னர் மொட்டை அடித்து காவி தரித்து, உருட்திராட்ச மாலை அணிந்த மஹா கார்த்ததாஸ் என்ற ஹரே ராமா சுவாமியும், சிஷ்யர்களும் கொழும்பில் தமது கிளையொன்றை ஸ்தாபிக்க வந்திருப்பதாகச் செய்தி பரவியது. அத்துடன் கொழும்பு மாநகரின் கோட்டைப் பகுதிகளில் சந்திக்குச் சந்தி இவர்கள் தாள வாத்தியங்களுடன் பாடித் துள்ளிக் கூத்தாடியும் வந்தனர். மஹா கர்த்ததாஸ் தான் முன்னாள் ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை சேவியர் என்பதும் தெரிய வந்தது.

எனது முன்னாள் சகமாணவன் என்பதனால் அவரை பத்திரிகைக்காகப் பேட்டி காணச் சென்றிருந்தேன். என்னை யாரென அடையாளம் கண்டு கொண்ட மஹா கர்த்ததாஸ் சுகங்களை விசாரித்தார். நான் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதனை அறிந்ததும் "கலியாணம் செய்வதால் உமக்கு எதுவித பிரயோசனமும் ஏற்படாது. இப்போது உமக்காக மாத்திரம் உழைக்கும் நீர் பின்னர் மனைவிக்காகவும், பிள்ளைகளுக்காகவும் மேலதிகமாக உழைக்க வேண்டும். மனைவி உமது உழைப்பை மாத்திரமல்ல உடற்சக்கியையும் உறிஞ்சி விடுவா. உமாதேவியை மணந்து கொண்ட சிவபெருமான் தொல்லைகளிலிருந்து விடுபடுவதற்காக இன்னும் தவம் செய்துகொண்டே இருக்கிறார். ஆனால் கிருஷ்ணரோ ஏற்கனவே தொல்லைகள் ஏதுமற்ற ஆனந்தப் பரவச நிலையை அடைந்து விட்டார். அதனால் பரமானந்த நிலையில் சதா ஆனந்தக் கூத்தாடி லீலா விநோதங்களைப் புரிந்து வருகிறார்" என்றார். அவரது விளக்கத்தைக் கேட்டதும் கல்யாண ஆசையிலிருந்த எனக்கு கிருஷ்ணரைப் போல் பல்வேறு பெண்களுடன் திருவிளையாடல் புரிய வேண்டும் போலிருந்தது.

"கிறிஸ்த்தவராயிருந்து கெமிக்கல் எஞ்ஜினியரிங் படிக்க ஜெர்மனிக்குச் சென்ற நீங்கள் எப்படி இந்தக் கோலத்துக்கு ஆளாகினீர்கள்?" என்று நான் கேட்ட போது, "ஜெர்மனிக்குச் சென்றதும் தனிமை என்னை மிகவும் பாதித்தது. கல்லூரி நேரம் தவிர எவருடனும் தமிழிலோ ஆங்கிலத்திலோ கதைக்கக் கூடிய வாய்ப்பே ஏற்படவில்லை. ஊமை போன்று விரக்தியோடு காலத் ஓட்டிக் கொண்டிருக்கையில் ஹரே ராமா இயக்கத்தினரின் சந்திப்பு ஏற்பட்டது. அதனால் நானாக அவகளைச் தேடிச் சென்று அவர்களது பிரசங்கங்களைக் கேட்டும், பூசை, பஜனைகளில் பங்கு பற்றியும் வந்தேன். சூரிய இனத்தை சேர்ந்ததாக கூறிக் கொள்ளும் ஜெர்மனியர்களான ஹரே ராமா இயக்கசுவாமகள் ஆரிய மொழியான சமஸ்கிருதத்தை அழுத்தம் திருத்தமாக கற்றுத் தெரிந்துள்ளனர். பகவத் கீதையில் சமஸ்கிருதத்தில் கூறப்பட்டிருக்கும் தத்துவங்களை வழுவின்றி உச்சரித்து அதற்கெல்லாம் ஆங்கிலத்தில் அவர்கள் கொடுத்த அற்புதமான விளக்கங்களை நான் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தேன். பின்னர் படிப்படியாக பகவானின் அனுக்கிரகத்தினால் நானும் அவர்களுள் ஒருவனாக சந்நியாசத்தை ஏற்றுக் கொண்டேன்" என்றார்.

"அப்பா அம்மா உங்களை வந்து சந்திக்கவில்லையா. அவர்கள் வந்து தங்களோடு வந்து விடும்படி கேட்டால் என்ன சொல்வீர்கள்" என்றேன்.

நான் இப்போதும் அப்பா அம்மாவுடன் தானே இருக்கிறேன். கிருஷ்ணரும் ராதையும் தான் எனது அப்பா அம்மா. அவர்களது திருநாமத்தையே அனுதினமும் செபித்துக் கொண்டிருக்க ஆனந்தமயமாயிருக்கும்" என்றார். அவர் என்னுடன் கதைத்துக்கொண்டிருந்த போதிலும் அவரது வலக்கை விரல்கள் கையில் தொங்கிக் கொண்டிருந்த துணிப்பைக்குள் இருக்கும் உருட்திராட்ச மாலையின் மணிகளை உருட்டிக் கொண்டிருந்தன.

மாலை வேளைகளில் சந்திக்குச் சந்தி நின்று பாடிக் கூத்தாடும் இவர்களை அலுவலகங்களிலிருந்து வேலை முடிந்து வெளியேறும் மக்கள் கூட்டம் ஆரம்பத்தில் வேடிக்கையாகப் பார்த்து சிரித்து விட்டுச் சென்றது. ஆனால் நாளடைவில் அவர்களது இசையால் வசமாகி அவர்களின் பக்தர்கள் ஆனார்கள். பிரபல வர்த்தகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் தனது வியாபாரக் களஞ்சியமாக இருந்த பழைய கட்டிடமொன்றை ஆலயம் அமைப்பதற்காக அவர்களுக்குக் கொடுத்துதவினார். வீட்டுக்குள் தனிமையில் அடைபட்டு ஆசைகளை அடக்கிக்கொண்டிருந்த முதலாளிமார்களின் மனைவியரெல்லாம் அவ்வாலயத்துக்கு சென்று வந்தனர். வாலிப மிடுக்குடைய ஹரே ராமா சுவாமிகளது கண்களின் காந்த சக்தி அவர்களை மிகவும் கவர்ந்தது. அவர்களை திருப்திப்படுத்தி அவர்களது கடைக்கண் பார்வையை பெறுவதற்காக வெறுங்கையுடன் செல்லாது பால், பழம், அரிசி, மரக்கறி வகைகளுடன் சென்றார்கள்.

காலை மாலை பூசைகளும், பிரசங்கங்களும் முறையாக நடைபெற்று வந்தன. அவற்றுடன் பிரசாதங்களும், தங்குமிட வசதிகளும் வழங்கப்பட்டு வந்ததினால் வாழ்க்கையில் விரக்தியுற்றோரும், அநாதைகளும் அங்கே தஞ்சமடைந்தார்கள். காலப்போக்கில் அவ்வாலயத்துக்கு அருகேயிருந்த பழைய கட்டிடத்தையும் விலைகொடுத்து வாங்கி அதிலே குருகுல பாடசாலையையும் ஆரம்பித்தார்கள். கன்னிப் பருவத்தில் ஒருவரைமனமாரக் காதலித்துப் பின்னர் அவரால் ஏமாற்றப்பட்டு சமூகத்தினரால் அவமதிக்கப்பட்டு விரக்தியடைந்த ஓர் ஆசிரியையும் ஹரே ராமாவில் சேர்ந்து சந்நியாசத்தை ஏற்றிருந்தார். அவவின் மனம் தான் விரக்தியுற்றிருந்ததே தவிர மேனியோ தளதளவென்று தக்காளிப் பழம் போலிருந்தது. ஜமுனா தாசி என மறுபெயர் சூட்டப்பட்ட அவவே பாடசாலையை நிர்வகிக்கும் பொறுப்பை தானாகவே ஏற்றுக்கொண்டா. மஹா கார்த்த சுவாமிகள் ஆலயத்துக்குப் பொறுப்பு, ஜமுனா தாசி பாடசாலைக்குப் பொறுப்பு.

ஆலயத்தில் ஆண் பெண் என்ற பாகுபாடின்றி ஒன்றாகவே இருந்து பிரார்த்திப்பார்கள், பிரசாதம் உண்ணுவார்கள், உரையாடுவார்கள். கிருஷ்ண பகவானே ஆண் பெண் பேதமின்றி சதா பெண்கள் புடைசூழ அவர்கள் மத்தியிலிருந்து திருவிளையாடல்கள் புரிந்தவரல்லவா. கார்மேக வர்ண மேனியை உடையவர்கள் மீது இன்று வெள்ளைக்காரப் பெண்கள் மோகம் கொள்வது அன்று பாரதநாட்டிலும் வழக்கிலிருந்தது என்பதனை கிருஷ்ண லீலை புலப்படுத்துகின்றது. கிருஷ்ணரே குழல் மன்னரல்லவா- அவரது புல்லாங்குழல் இசையில் மயங்காத ஜீவன்களும் உண்டோ?

மஹா கார்த்ததாசும், ஜமுனா தாசியும் அதற்கு விதிவிலக்கானவர்களா? இசையால் மாத்திரமல்ல தசையாலும் வசம் ஆனார்கள். ஆனந்த லீலைகள் புரிந்த மாயா விநோதனின் பரமார்த்த சிஷ்யர்கள் அல்லவா. அவர்களது ஆன்மீக உறவு ஆண்டான் ஆண்டாள் உறவாகப் பரிணமித்தது. பள்ளியறையில் அவர்கள் முற்றும் துறந்தவர்களாயினர். அவர்களது அந்தரங்க உறவுக்கு ஹரே ராமா இயக்க ஒழுங்கு விதிகள் தூப தீபமிட்டன. தாசனும் தாசியும் தமது சந்நியாசத்தின் உச்ச நிலையை அடைந்து விட்டனர். தம்மை மறந்த நிலையில் இருவரும் ஆனந்த லீலைகள் புரியத் தலைப்பட்டு விட்டனர். பெரும்பாலான நேரத்தைப் பள்ளி அறையிலேயே செலவிட்டனர். குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரம் வெளியில் தரிசனம் தருவார்கள். உணர்ச்சிகளை அடக்குவதற்காக உருட்திராட்ச மணிகளை உருட்டிய மஹாகர்த்ததாசின் விரல்கள் இன்று உணர்ச்சிகளை தூண்டக் கூடியவற்றை உருட்டிக் கொண்டிருக்கின்றன. ஜமுனா தாசி தன்னை மறந்தாள்- தன் நாமம் கெட்டாள்- தலைப்பட்டாள் தலைவன் திருவிளையாடல்களுக்கே. ஆஹா என்னே ஆனந்தப் பரவசம்! அற்புதம்!! அற்புதம்!!!

"கலியாணம் செய்து கொள்வதால் உனக்கென்ன நன்மை கிட்டப் போகிறது" என அன்று எனக்கு உபதேசம் செய்த சந்நியாசி இன்று சம்சாரி ஆகிவிட்டார். குரு செய்வது குற்றமில்லை என்பதை அடியார்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் தமக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லையே என சில மஹாகர்த்ததாசின் பக்தைகள் விசனமடைந்தார்கள். பணத்தைப் பற்றியே கனவிலும் சிந்திக்கும் அவர்களது கணவர்களான முதலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்களுக்கு இவர்களது ஏக்கம் புரியவா போகிறது.

மஹாகர்த்ததாஸ் மனைவிக்காகவோ, பிள்ளைகளுக்காகவோ மேலதிகமாக உழைக்க வேண்டிய தேவை என்றென்றுமே ஏற்படாது. ஒரு வேளை சாப்பாட்டுக்கே வழியின்றி தெருத் தெருவாக பிச்சை எடுக்கும் பிச்சைக்காரர்களுக்கு பாத்திரமறிந்து பிச்சைகொடுக்கத் தவறும் பத்தினிப் பெண்கள் லீலாவிநோத சுவாமிகளுக்கு அன்புக் காணிக்கைகள் மாத்திரமல்ல, கேளிக்கைகளும் உவந்தளிக்க முன்வரும்போது அவர்கள் ஏன் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும்? எல்லாமே அவர்களுக்கு இன்பமயம். இன்பமே எந்நாளும் துன்பமில்லை.



வாழ்வில் நடக்கும் முக்கிய வைபவங்களை நவீன முறையில் படம் பிடித்துக்கொள்ள


Creative Photo

கருணா

(416) 429-8586

"Canadian Style Sri Lankan Smile"

## வானில் தேவதைகள்....



சொர்க்கத்தில் சூரியன், சந்திரனுடன் அழகிய தேவதைகளும் உள்ளனராம். இவர்கள் கண்ணைப் பறிக்கும் ஒளியுடனும், கவர்ச்சியுடனும் காணப்படுகின்றனராம்! ஐம்பதாயிரம் மைல் வேகத்தில் பறக்கும் ஆற்றல் பெற்ற இந்த தேவதைகள் ஐம்பது அடி உயரம் உள்ளனராம்.

இந்த தேவதைகளை வானில் பார்த்து வியந்ததாக ரஷ்ய விண்வெளி வீரர்கள் கூறுகின்றனர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா

## ராமுவும் சாமுவும்

ஒரு ஊரில் கண்ணன் என்ற ஒரு தோட்டக்காரன் தனது அன்பு மனைவி பொன்னியுடன் மிக ஆனந்தமாக வாழ்க்கை நடத்தி வந்தான். தோட்டக்காரனான இவன் ஊராரிற்கு மிக நல்லவனாக வாழ்ந்து வந்தான். அவன் மனைவி பொன்னியும் அவனுக்கேற்ற மனைவியாய் வாழ்ந்து வந்தாள். இவர்களுக்கு செல்வத்தால் எந்தக் குறையும் இல்லாவிட்டாலும், பிள்ளைச் செல்வம் இல்லாத குறை இவர்களை வருத்தியது.

ஒருமுறை கண்ணனும் பொன்னியும் கோயிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் பொழுது வழியில் ஒரு பெரியவர் கண்ணனின் கையில் ஒரு அழகிய வெள்ளை நாய்க்குட்டியை ஒப்படைத்து இதற்கு நீங்கள் 10 ரூபாய் மட்டும் கொடுத்தால் போதும் என்றார். கண்ணனும் அதற்கிணங்கி 10 ரூபாய் கொடுத்து அந்நாய்க்குட்டியை வங்கி வீட்டிற்கு கொண்டு சென்றான். பின் அந்நாய்க்குட்டிக்கு ராமு என்று பெயர் சூட்டி அதைத் தன் சொந்தப் பிள்ளையைப் போல காத்து வந்தான். ராமுவிற்கு இரண்டு வயது ஆகிவிட்டது, ஆனால் அதனுடன் விளையாட யாருமே இல்லை. பல மாதங்கள் கழிந்து கண்ணனுக்கு ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சாமு என்று பெயர் சூட்டினார்கள். சாமுவுக்கு வயது மூன்று ஆகிவிட்டது. ராமுவும் சாமுவும் சேர்ந்து விளையாடு வார்கள். அதனால் அவர்கள் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த நட்பு வைத்திருந்தார்கள். ஒருமுறை அவ்வூரில் மிகுந்த மழையும் காற்றுமாக இருந்தது. வெளியே விளையாடப்போன சாமுவைக் காணவில்லை. கண்ணனும் பொன்னியும் எல்லா இடத்திலும் தேடிக் களைத்து விட்டார்கள். ஆனால் ராமு சாமுவை சில நிமிடங்களிலேயே வீடு கொண்டுவந்து சேர்த்து விட்டது. இப்படிப் பல சந்தர்ப்பங்களில் ராமு கண்ணனின் குடும்பத்தில் உள்ள நட்பை வெளிப்படுத்தியது.

சில வருடங்களுக்குப் பின் ராமுவின் உடலில் குட்டை பரவத் தொடங்கியது. ராமுவிற்கு சிகிச்சை செய்ய பணம் செலவாகுமே என அஞ்சிய கண்ணன் ராமுவைக் கொண்டுபோய் வேறு ஒரு ஊரில் விட்டு விட்டான். ராமுவைப் பிரிந்த சாமுவிற்கு ராமுவை நினைத்து நினைத்தே சுகவீனம் வந்து விட்டது. இதனால் கவலையுற்ற கண்ணன் ராமுவைத் தேடிப் புறப்பட்டான். ஆனால் ராமு அவன் கண்ணில் படவில்லை. கண்ணன் மிக கவலையோடு வீடு திரும்பினான். வீட்டினுள்ளே வந்தவன் ராமுவும் சாமுவும் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். கண்ணனைக் கண்டதும் ராமு தனது வாலை ஆட்டியது. கண்ணன் ராமுவிற்குச் செய்த துரோகத்தை நினைத்து மனம் வருந்தினான். பின் ராமுவிற்கும் சாமுவிற்கும் சிகிச்சை செய்து, பழமை போல ஆனந்தமாக வாழ்ந்தார்கள்.

~ பாலராசா ஹரிகரன் ~

(JOHN XXIII கத்தோலிக்கப் பாடசாலை)

**சிறுவர் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CASA Restaurant



இலங்கை, இந்திய, கனேடிய உணவகம்

## Take Out & Catering

உங்கள் அனைத்து வைபவங்களிற்கும்
நீங்கள் விரும்பிய உணவுகளையும்
சிற்றுண்டி வகைகளையும் சுவையுடன்
செய்து தருகிறோம்.

**சுவை அது GASA**

**Tel: (416) 321-1219**

2950 Kennedy Road, Unit. 3
(Kennedy & North of Finch)
Scarborough, ON.

ரோஜா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து அச்சமைப்புத் தேவைகளுக்கும்

TEL: (416) 425-2884

மலிவு விற்பனையில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

நாகரிகத்தின் பிறப்பிடம்

**Manchulaa Fashion**

5818 Sheppard Ave. E., Scarborough,

TEL: (416) 297-9875, 297-7011 FAX: 297-7595

**வீடியோ மாருதி**

**VIDEO MARUTY** INC

* Professional Video Productions
* International Video Transfer

தொடர்புகளுக்கு:-

ரொறன்ரோ

கிருபா (416) 751-8143

மொன்றியல்

(514) 989-5021 இன்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★★ நம்பிக்கை நற்சித்திரம் ★★


நான் 1983 ல் இலங்கையில் வவுனியா என்ற ஊரில் பிறந்தேன். எனது பெயர் பானுமதி கந்தையா. எனக்கு இரண்டு அக்காவும் மூன்று அண்ணாவும் உண்டு. எனது சகோதரர்களில் நான் தான் இளையவர்.

நான் எனது கல்வியை வவுனியா மகளிர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்தேன். அங்கு நான் பல நடன, பாட்டு, பேச்சு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினேன். அங்கு நான் முதலாவதாக வாசிப்புப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டேன். எனக்கு முதலாவது பரிசு கிடைத்தது. கல்வி அமைச்சர் இராஜ மனோகரி புலேந்திரன் பரிசில்களை வழங்கினார்.

இங்கு வந்ததும் எனது கல்வியை ரொறன்ரோ கல்விச் சபையில் வின்செஸ்ரர் பாடசாலையில் 4ம் வகுப்பில் ஆரம்பித்தேன். சில மாதங்கள் சென்றபின் எமது பாடசாலையில் தமிழ் வகுப்பு ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தார்கள். அந்த வகுப்பில் நானும் சேர்ந்து கொண்டேன். எங்களுக்கு தமிழ் கற்பிக்க வந்த ஆசிரியர் திருமதி சரஸ்வதிதேவி கணேஸ்வரன் ஆவார்.

எமது பாடசாலையில் தமிழ் வகுப்பு மாணவர்கள் யூன் 1994இல் கலை நிகழ்ச்சி ஒன்று ஆசிரியரின் மேற்பார்வையில் நடத்தினோம். அதில் வில்லுப் பாட்டில் நானும் பங்கு பற்றினேன். தமிழ் வாழ்த்துப் பாடினோம்.

சென்ற ஒக்டோபர் மாதம் சுவாமி விவே- கானந்தர் முதன் முதலாக சிகாகோ சர்வ சமய மாநாட்டில் முதன் முதலாகத் தோன்றிய நூற்றாண்டு இராம கிருஷ்ண சேவாச்சிரமத்தினர் பேச்சுப் போட்டி யொன்றை ஒழுங்கு செய்தனர். இராம கிருஷ்ண சேவாச்சிரமத்தைச் சார்ந்த எமது தமிழ் ஆசிரியர் திருமதி சரஸ்வதி தேவி கணேஸ்வரன் எம்மை ஊக்குவித்து எம்மில் சிலர் பங்கு பற்றி பரிசில்களும் பெற்றோம். நூற்றாண்டு விழாவில் பேசும் சந்தர்ப்பமும் கிடைத்தது. நான் கீழ்ப் பிரிவில் முதற் பரிசு பெற்றேன். பேசுவதற்கு விடயங்களை எழுதித் தந்து பயிற்சியும் தந்தார் திருமதி. திருஞானம். இவர்கள் இருவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றென்.



இவ்விழாவிற்கு வேதாந்த சங்க இராமகிருஷ்ண மிஷன் (கனடாக்கிளை) தலைவர் சுவாமி பிரமதானந்தாஜி பிரதம விருந்தினராக கலந்து ஆசியுரை கூறி எம்மையும் ஆசீர் வதித்து பரிசில்களை வழங்கினார். சிவானந்தாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமிஜி பிரகாஷ மயானந்தாவும் சிறப்புரை வழங்கினார்.

எனது அப்பா அம்மாவும் என்னை மிக ஊக்குவித்து காலையில் எழுப்பி மனனம் செய்ய வைத்து எனது திறமைக்கு காரணமாயிருக் கின்றனர். அவர்களுக்கு நான் என்றும் நன்றியாக இருக்க வேண்டும். அது பற்றி நான் பெருமைப்படுகிறேன்.

சென்ற மாதம் (ஜனவரி 29, 1995) வேதாந்த சங்கம் ஏற்பாடு செய்த சுவாமி விவேகானந்தர் பிறந்த தின விழாவில் சிறுவர் நிகழ்ச்சியில் வின்செவரர் பாட- சாலை தமிழ் வகுப்பு மாணவர்கள் ஓர் சிறு நாடகம் அளித்தோம். அதில் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூய அன்னை சாரதாதேவியாராக பாத்திரம் பெற்று முதன் முதலாக சகோதரி நிவேதிதாவை (மார்கரெட் நொபிள்) வரவேற்றேன்.

இராமகிருஷ்ண பரமகம்சர், தூய அன்னை சாரதா, சுவாமி விவேகானந்தர் வாழ்க்கை வரலாறுகளையும் உபதேசங்களையும் அறிவதோடு அவர்கள் விழாக்களிலும் பங்கு பற்ற எமக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது பற்றி நான் பெருமைப்படுகிறேன்.

எனக்கு பேசுவதில், எழுதுவதில் மிக ஆர்வமிருப்பதால் 'ரோஜா' வில் இடம்பெறும் சிறுவர் பூங்காவிற்கு எழுதுவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

நான் நடனமும் படித்தேன். சங்கீதம் படித்துக் கொண்டிருக்கிறேன். தேவாரம் பாடுவதில் எனக்கு மிக விருப்பம். சென்ற ஆண்டு (1994) யூன் மாதம் எமது பாடசாலை தமிழ் வகுப்பு மாணவர்கள் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கு ஓர் கலைவிழா ஒழுங்கு செய்தோம். அப்போது நடன நிகழ்ச்சி, வில்லிசை போன்றவற்றில் பங்கு பற்றினேன்.

எனக்கு பாடசாலையிலும் திறமையாக பங்கு பற்றுவதற்காக 1995 இல் சான்றிதழ் (Award) தந்தார்கள்.

'ரோஜா' மலரில் எனது ஆக்கத்தை வெளியிட வசதி செய்து தந்த ஆசிரியருக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வரிய சந்தர்ப்பங்களை எனக்குத் தந்த இறைவனுக்கும் நன்றி கூறுகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சங்கள்

~ B.R. ரஞ்சனி ~

இன்று யாழ் இந்துக்கல்லூரி ஆண்டுவிழா. அந்த ஆண்டுவிழாவில் ராஜி கூட பங்கேற்கிறாளல்லவா. ராஜி கண்ணுக்கு மெல்லியதாய் மைதீட்டி முகத்திற்கு பவுடர் போடாது கிறீம் தடவி அளவான சிறு பொட்டிட்டு தன்னை அழகுபடுத்தினாள். தலையையும் லூசாக பின்னலிட்டு மல்லிகை மொட்டால் கட்டிய சரமாலையை அதனில் சூடி ஆண்டு விழா செல்லப் புறப்பட்டாள். ராஜியின் தந்தை ராஜியை காரில் கூட்டிச் சென்றார்.



கல்லூரி வாசலில் சூர்யாவும் நண்பர்களுமாக வருவோரை வரவேற்றபடி நின்றனர். ராஜியையும் தந்தையையும் அனைவரும் வரவேற்றனர்.

ராஜியை சூர்யா கீழிருந்து மேல் நோக்கினான். 'இவளை எப்போது பார்த்தாலும் புதிதாகப் பூத்த மலர்போல இருக்கிறதே. இந்த அழகுப் பதுமை பூலோகத்திற்கு சொந்தமானதா....... அல்லது........... சொல்வார்களே! "தேவலோக கன்னிகை யொன்று கீழிறங்கி வந்து நின்று" அவனது சிந்தனையை மேலும் வளரவிடாது அவனது நண்பர்கள் "டேய் சூர்யா பகலில் நின்று கொண்டு..... என்னடா..... கனவு காணுறாய் வந்தவர்களை உள்ளே அழைத்துச் செல்லாது"

சூர்யா ராஜிக்கு வெக்கமாய் போய் விட்டது. ராஜியின் தகப்பனுக்கு இவர்களது முகபாவங்கள் புரியவில்லை.

சூர்யா, வாருங்கள் உள்ளே சென்று அமரலாம் என்று அழைத்துச் சென்றான்.

குறித்த நேரத்தில் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. சூர்யாவின் வரவேற்புரை யாவரையும் கவர்ந்தது. யாவரையும் வருக வருக என்று வரவேற்பதில் நான் மிகுந்த மகிச்சியடைகிறேன்.

அடுத்து கல்லூரி அதிபர் பேசினார். சூர்யா நிகழ்ச்சிகள் முடிய முடிய அவைகளைப் பற்றியும், நன்றிகளையும், அடுத்தடுத்தவை நடப்பதையும் அறிவித்தான்.

இன்று அங்கு கதாநாயகன் சூர்யா அல்லவா. ராஜியையும் அவளது நண்பிகளையும் பார்த்து அடிக்கொருதரம் புன்னகை பூத்தான்.

'ஓ சூர்யா நீ என்ன ஒரு கம்பீரமான ஆணழகன். நீ எனக்கு கிடைப்பாயா?.... அல்லது யார் மீதாவது காதலிருக்குமா?... அப்படியிருந்தால் நிச்சயமாக என்னால் தாங்க முடியாது, முடியாது. தன்னையுமறியாமல் வாய்திறந்து விட்டாள்' என்னடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 மணித்தியாலத்துக்குள்
## வருமான வரிப்பணத்தை மீளப்பெறலாம்!



உங்கள் வருமான வரி
மீளல் விண்ணப்பப் பத்திரத்தை
மின் கணணியூடாக
(Electronically) செலுத்தி
காசோலையாக
உடன் பெறலாம்



# PAN-TAX INC

**868 Markham Road, Unit. 103, Scarborough**

**Tel: (416) 438-5000**

---

★ தரமான இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
★ உடன் மரக்கறி, பழவகைகள்

***Tel: (416) 444-8202***
***Fax: (416) 444-8913***




தரமான வீடியோ திரைப்படங்கள்,
வீடியோ பிரதி மாற்றம்,
NTSC <> PAL
Lotto, TTC டிக்கட்டுக்கள்

மற்றும் உங்கள் சகல தேவைகளையும்
பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

**Victoria Park /Ellesmere சந்திப்பில்**

# Best Way Mart

**2169 Victoria Park Ave, Scarborough, Ont.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜி முடியாது. உன்னால முடியுமடி. அர்த்த புஷ்டியுடன் சுமி கண்ணடித்தாள். ராஜிக்கு அழுகையே வந்துவிட்டது. தன்னை கடிந்து கொண்டாள்.

அடுத்ததாக பட்டிமன்றம் ஆரம்பமாகும் தயவு செய்து கலந்து கொள்பவர்கள் மேடைக்கு வரவும் என்று ஒவ்வொருவரது பெயர்களையும் வாசித்தான்.

யாவரும் எழுந்து சென்றனர். விஞ்ஞான சார்பில் சூர்யா மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் யோகன் மத்திய கல்லூரி மாணவன் பிரபா.

மெஞ்ஞான சார்பில் ராஜி வேம்படி மகளிர் கல்லூரி மாணவி மாலினி கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி சத்தியாவும் வாதிட வந்திருந்தனர்.

யாவரையும் கண்களாலேயே அளந்தான். மற்றவர்களும் அப்படியே.

பட்டிமன்றத் தலைவர் வணக்கம் கூறி ஓரிரு உரையுடன், "இப்போ சூர்யா விஞ்ஞானம் சிறந்தது என்று வாதிடுவார்" என்று அறிவித்தார். சூர்யா எழுந்து மைக்கருகே சென்றான்.

சபையோர் கவனம் முழுக்க மேடைமீது வியாபித்திருந்தது.

20ம் நூற்றாண்டை நெருங்கக் கொண்டிருக்கும் யுகத்தில் விஞ்ஞனத்தின் தேவைகளே மக்களுக்கு அவசியமாக இருக்கிறது.

பறப்பதற்கு விமானம், கடல் பிரயாணத்திற்கு கப்பல் இப்படி நெடுந்தொலைவுகளுக்கெல்லாம் போய்வர இலகுவான பயணம் செய்ய கண்டு பிடித்திருக்கிறது விஞ்ஞானம்.

இப்போ கொம்பியூட்டர்கள் மயம் இது விஞ்ஞானத்தின் பயன்கள். இன்று மனிதன் சந்திர மண்டலத்தில் கால் பதித்திருக்கிறானென்றால் அது கூட விஞ்ஞான அறிவே. அது மட்டுமா சோதனைக் குழாயில் குழந்தை கூட உருவாக்குகின்றான்.

எனது வாதம் இந்த முட்டாள்தனமான மெஞ்ஞான கொள்கைகளைத் துரத்த வேண்டும். இப்போ எமக்கு விஞ்ஞானமே பல நன்மைகளைச் செய்வதால் விஞ்ஞானம் சிறந்தது. என்று கூறி சென்றமர்ந்தான். சபையோர் கைதட்டி தம் பங்குகளை வெளிப்படுத்தினர்.

அடுத்து ராகினி மெஞ்ஞானமே சிறந்தது எனும் சார்பில் பேசுவார். பேசுவார் என்று சொல்வதை விட சூர்யாவின் கருத்துக்களுக்கு தனது எதிர்க்கருத்தின் மூலம் சரியான சாட்டை அடி கொடுப்பார் என நினைக்கிறேன் என ராஜியை மேடைமுன் அழைத்தார்.

ராஜிக்கு இன்று ஏனோ படபடப்பாக இருந்தது. சூர்யாவிற்கு முன்னால் மிக அருகாமையில் 'ஏன் பயம் இது வாத மேடையல்லவா, இங்கு எம் திறமைக்குத் தானே முதலிடம், படபடப்பு கூடவே கூடாது' உசாராக நடந்து மைக்கினருகே சென்றாள்.

தனது வாதம் விஞ்ஞானத்திலும் சிறந்தது மெஞ்ஞானமே என வாதிட்டாள்.

"மெஞ்ஞானம் வேர் போன்றது. விஞ்ஞானமோ மேலே இருக்கின்ற மரம் போன்றது. ஆகவே அழிவு வந்தால் முதல் அழிவது மேலே இருக்கும் மரம். அதாவது என் கருத்துப்படி விஞ்ஞானம் ஆக்கத்தை விட அழிவுப் பாதைக்கு மக்களை வேகமாக அழைத்துப் போகிறது என்றுதான் நான் கூறுவேன்"

"சூர்யா அவர்கள் மிகத்திறமையாக வாதிட்டார் தான் ஆனால்......., திரும்பி சூர்யாவை ஏறிட்டாள். சூர்யா என்னதான் இவள் கூறப்போகிறாள் என்று கேட்பதற்கு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"விஞ்ஞானம் எத்தனையோ சாதனைகளைச் செய்கின்றது தான் சூர்யா சொன்னது போல. ஆனால் உண்மை வேறு இந்த விஞ்ஞானமானது எமது மெஞ்ஞானத்திலிருந்து கற்றுக் கொண்டதுதான் ஏராளம் ஏராளம். ஆம், மெஞ்ஞான வித்துக்களைக் கொண்டே விஞ்ஞானத்தைக் கண்டுபிடித்தான் மனிதன்."

"எங்கே யாராவது சொல்லுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்போம் இந்த விஞ்ஞான்தை ஒரு குழந்தையை சிருஷ்டிக்கச் சொல்லி....," மனிதனிடம் இருந்து பெற்ற எச்சங்களைக் கொண்டுதான் சோதனைக் குழாய் மூலம் குழந்தை படைக்கிறான் இந்த மனிதன். ஆகவே எல்லாமே மெஞ்ஞானம் போட்ட பிச்சை.

ஆவேசம் வந்தவள்போல் பேசிக்கொண் டிருந்தாள். சபையோர் வாயடைத்தவர்கள் போல் அவளின் பேச்சில் லயித்திருந்தனர். அவள் பேசுவது யாவருக்கும் தெரிந்த யதார்த்த உண்மைகள் தான். ஆனால் எல்லோராலும் இப்படிப் பேச முடியாதே.



இங்கே ராஜி பேசினாள். சூர்யா அவள் பேச்சில் தன்னையே மறந்திருந்தான். தனக்கு எதிராக வாதிடுகிறாளே சாட்டை அடிக்கிறாளே என்று கூட நினைக்க வில்லை. அவளது வாதத் திறமையை மனதாரப் பாராட்டினான்.

'இந்த ராஜியின் பின்னழகு கூட எத் தனை அழகாக இருக்கிறதே நேர்த்தியாக இருக்கிறது. தப்பு.... இப்படிக் கள்ளமாக ரசிப்பது. தப்புக்கு மேல் தப்பு உள்ளு ணர்வு கூற திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

பறவையைக் கண்டான் விமானம் படைத்தான், துள்ளி ஓடும் மீனைக் கண் டான் கப்பல் செய்தான். வானலைகளைக் கொண்டு வானொலியைக் கண்டுபிடித்தான்.

இப்படி எமக்கு எல்லா விஞ்ஞானத்தை யும் தந்தது மெஞ்ஞானம். ஆகவே இதுவே சிறந்தது என்று கூறி பேச்சை முடித்தாள்.

பலத்த கரகோசம் சபையோரிடமிருந்து. மாணவர்கள் ஆம் ஆம் மெஞ்ஞானம் தான் சிறந்தது என்று கத்தினார்கள்.

அடுத்தவர் பேசத் தொடங்கிவிட்டார். ராஜி அமர்ந்தவுடன் சூர்யாவை ஏறிட்டாள். சூர்யா புருவத்தை உயர்த்தி, பெருவிர லால் 'டக்கர்' என உயர்த்திக்காட்டினான்.

ராஜிக்கு ஆயிரம் ஆயிரம் மகிழ்ச்சிப் பட்டாம்பூச்சிகள் மனதுள் சிறகடித்தன. யார் பாராட்டைப் பெற வேண்டுமென நினைத்தாளோ அவனே பாராட்டிய போது அவளுக்கு பெருமையாக இருந் தது. இறுதியில் போட்டியின் முடிவு மெஞ்-ஞானம் பக்கம் தான். மெஞ்ஞானமே சிறந்த தென்று பட்டிமன்றத் தலைவர் அறிவித்தார். அதோடு சூர்யா, றாகினி எதிர்காலத்தில் பெரிய பேச்சாளராக வரத் தகுதியுள்ளார்கள். அது அவர்கள் பேச்சு வாதங்களிலேயே தெரிந்தது. அதை அவர் கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று பேச்சை முடித்தார்.

சூர்யா ராஜி ஒருவரை ஒருவர் பார்த்து புன்முறுவல் பூத்தனர். இருவருக்கும் தங் களை சேர்த்து வாழ்த்தியது ஆனந்தமாக இருந்தது.

விழா முடிந்து வீடு வந்து சேர இரவாகி விட்டது. இருவர் வீட்டிலும் இருவரையும் சேர்த்துப் பாராட்டிப் பேசினார்கள்.
சூர்யா படுக்கையில் புரண்டான். இன்று விழா முழுக்க நண்பர்கள் என்னமா இவனை கிண்டலடித்தனர். இவள்தான்டா உனக்கு சரியானவள். நீ எப்படி எல்லா வற்றிலும் திறமையாக இருக்கிறாயோ அதே மாதிரி அவளும் இருக்கிறாள். அப் படி ஒருவேளை எனக்கேத்தவள் இவள் தானோ. எனக்கு பதினெட்டு அவளுக்கு பதினேழு அல்லது ஒருவயது குறைவா யும் இருக்கலாம். வயது சரி ஆனால் அவளோ பெரும் பணக்காரி. நானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சராசரி மத்தியவர்க்க குடும்பத்தவன். என் ஆசைகள் நிறைவேறுமா.

படுக்கையில் நித்திரையில்லாது பல யோசனைகள் நீண்டுகொண்டிருந்தன அவனுக்கு.

அடுத்தடுத்த நாட்களில் ராஜியை சூர்யா வால் மறக்க முடியவில்லை. மாறி மாறி அவள், மனதில் வந்து அவனை மகிழ்வூட்டினாள்.

நாட்கள் உருண்டது. ஓரிரு தடவை ராஜியையும் தோழிகளையும் கண்டு பொதுவகாக் கதைத்தான்.


வீணாக ஆசைகளை மனதில் வளர்த்து கவலைப்படாது என்று அவளை காண் பதை தவிர்த்துக் கொண்டுவந்தான்.

ஆனால் ராஜிக்கு ஆசைகள் கூடினதே தவிர குறையவில்லை.

பரீட்சைகள் நெருங்கிக் கொண்டே வந் தது. சூர்யாவிற்கு பல்கலைக்கழக நுழைவு பரீட்சையாதலால் எல்லா நினைவுகளை யும் மூலையில் ஒதுக்கி விட்டு படிக்கத் தொடங்கினான்.

அடுத்த இதழில் தொடரும்...

## ஊரையே மிரட்டுகிறான் இந்த ஓநாய் சிறுவன்!



மருத்துவமனையிலிருந்து தப்பிச்சென்ற ஓநாய் சிறு வன் ஆறுக்கும் மேற்பட்டோரைக் கடித்துக் குதறி விட்டான். இவனைப் பிடிக்கும் பணி தொடர்கிறது.

இந்த ஓநாய் சிறுவனின் பெயர் டெல் பிளேன்ஸ். ஓநாயைப் போன்று கைகளாலும், கால்களாலும் பாய்ந்து, பாய்ந்து ஓடுகிறான். காட்டில் வேட்டைக்குச் சென்றோர் இவனைப் பிடித்து வந்து மருத்துவமனை யில் சேர்த்தனர். காட்டில் வேட்டைக்குச் சென்றபோது, ஒரு முதிர்ந்த பெண் ஓநாயுடன் காணப்பட்ட இவனை தந்திரமாகப் பிடிக்க முற்பட்டனர். அப்பொழுது அந்தப் பெண் ஓநாய் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதைக் கண்ட சிறுவன் கதறி அழு தான். ஓநாயைச் சுட்டவரை வெறித்தனமாகத் தாக்கி அவர் விரலைக் கடித்துத் துண்டாக்கினான். இறந்து கிடந்த ஓநாயையே சுற்றி சுற்றி வந்தான். இதிலிருந்து இவனை அந்த ஓநாய் வளர்த்திருக்க வேண்டுமென்று நம்புகின்றனர்.

இந்த ஓநாய் சிறுவனை பிடிக்கும் முயற்சி தொடர்கிறது. இவனுக்கு வயது மூன்று.


உங்கள் அனைத்துத் தேவைகளையும்
பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

PRINCESS PLAZA வில்
துவாரகாஸ்

1670 Victoria Park Ave.,
Toronto, Ont.
Tel: (416) 757-1091




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமிருந்து வலம்.

1. மொட்டு
3. கனடாவிற்குள் களவாக வருபவர்களிடம் இதுவும் பதிவு செய்யப்படுகின்றது.
6. எம்.ஜீ.ஆர் நடித்த முதலாவது படம் என்றால் சிலருக்கும், கமல்-கோவை சரளா ஜோடியாக நடித்த படம் என்றால் பலருக்கும் தெரிவது
7. தமிழீழமெங்கும் பிரபலமானது இந்த மரம்.
10. வஞ்சனை.
11. கல்விக்கு இல்லாதது.
12. துணை
14. அரசன் ஒருவனுக்கான வெற்றிக்கான பாதையை காட்டியது இந்தப் பூச்சி.
15. பக்குவம்.
17. பாண்டவர் இல்லாததால் இங்கு ஆங்கிலத்தில் தரிசனம் தருகின்றார், அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ரோமன் கத்தோலிக்க மதத் தலைவர்.

**போட்டி இல: உஇல் இருந்து மூவருக்கு பரிசுகள் ($50, $25, $10) வழங்கப்படவுள்ளது.**

## மேலிருந்து கீழ்.

2. பழசு எப்போதும் இதற்கு எதிர்.
3. தினகரன் ஆசிரியராக அலங்கரித்த இவருக்கென்றும் ஒரு காலமிருந்தது.
4. இறுதியான நட்சத்திரம்.
5. மாமியார் வீட்டில் தண்டனை அனுபவிப்பவன்.
7. அண்மையில் ஜப்பானில் பலரைப் பலிகொண்டது.
8. கீறு.
12. முடிவில்லாத ஊக்கவிசை.
13. திருவள்ளுவர் பிறந்த ஊர்.
14. அமெரிக்காவில் பிரபல வழக்கொன்றின் பிரபல எதிரி.
16. தவம் செய்பவர்.
17. இதனைப் பிடித்தவள் பாக்கியசாலி என்கிறது பழமொழி.

## வலமிருந்து இடம்.

18. பிணம்.
19. மதில் மேல் இருக்கும் வீட்டு மிருகம்.
20. கனடாவின் நீண்ட நதி.

## கீழிருந்து மேல்.

9. சாறு.

ரோஜா வின்


**சொற் சிலம்பம்**

போட்டி

இல:- 2

தயாரிப்பு:

எஸ். ஜெகதீசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோஜா வின்

# சொற் சிலம்பம்

**போட்டி இல: 1**

குலுக்கள் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு அதிஷ்டசாலிகள்:-

1. ***சி. கமலநாதன்*** (ரொறன்ரோ)
2. ***ம. ராஜி*** (மொன்றியல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கு | ண் | 2 டு | 3 சி | | 4 நி | 5 லா | |
| ற | | 6 ப் | ரி | 7 யா | | 8 ப | னை |
| 9 ம | 10 தி | | ப் | 11 து | | ம் | 12 தா |
| 13 க | ரு | ம் | பு | | 14 ஹா | | 15 வி |
| ள் | | த | | 16 ச | மா | தி | |
| | 17 அ | ப் | 18 கா | னி | ஸ் | 19 தா | ன் |
| 20 ம | க | ரா | சி | | | | க |
| 21 து | ம் | 22 பி | | 23 சா | ய் | பா | 24 பா |

**உங்கள் பதில்கள் யாவும் ஏப்ரல் 05, 1995ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, 'றோஜா' வின் முகவரிக்கோ அல்லது Fax க்கோ அனுப்பி வையுங்கள்.**

**ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.**

**சரியான பதில்களை எழுதும் அதிஷ்டசாலிகள் மூவருக்கான பரிசில்களை 'TV La Publications' ஸ்தாபனத்தினரால் அனுப்பிவைக்கப்படும்.**


# வானொலி நிகழ்ச்சிகள்

| சங்கமம் | கீதவாணி | தமிழ்ச் சோலை | நற்செய்தி |
|---|---|---|---|
| AM 1320 KHz | CIRV 88.9FM | AM 1320 KHz | AM 1540 KHz |
| புதன் மாலை 9.00-10.00 | சனி காலை 8.00-10.00<br>ஞாயிறு காலை 6.00-8.00 | ஞாயிறு காலை 9.00-10.00 | செவ்வாய் மாலை 10.00-10.45 |

## RADIO ASIA - 530 AM அலைவரிசையில்...

திங்கள் முதல் - வெள்ளி வரை
மாலை 8.30 - 10.00
சனி, ஞாயிறு :~ மாலை 9.00 - 10.00
'ராகப்பிரவாகம்', 'சங்கராபரணம்', 'தமிழோசை', 'குங்குமம்'

'தமிழரங்கம்':~ AM 1540 KHz - செவ்வாய் மாலை 10.45 - 11.30




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவித்தோட்டம்

## பணம்

அந்த அழகான
கடதாசிக்குத்தான்
எத்தனை அதிகாரங்கள்
பொருட்களை
மட்டும் அல்லாது
மனிதர்களின்
மனங்களையும்
மாற்றிவைக்கிறதே...

~ சுரேஸ் ~

## சீ... சீ......

சேலைக்குள்
ஒளித்து விளையாடும்
பழக்கத்தை
யார் பழக்கியது
இந்த நிலவுக்கு!

~ லிங்கேஸ் ~

## பாசக் கயிறு

முன்னேற்பாடு
இன்றி
சொர்க்கம்
நரகம் என்ற
ஊர்களுக்கு
கூட்டிச்செல்லும்
ஆயுள் பயண
வண்டி

~ நளினி ~

## பற்கள்.

ம்......

தாமரையையும் - நீ
மிஞ்சிவிட்டாய்
என் முன்னே
உன் உதடுகள்
விரிகையிலே
முத்துக்கள்
அல்லவா
பூக்கின்றன!

~ ரமேஸ் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUTO MECHANIC SHOP




உங்களின் சகல விதமான
திருத்த வேலைகளுக்கும்
எம்மை நாடுங்கள்.
உங்கள் மனநிறைவுக்கு
நாங்கள் உத்தரவாதம்.

- ***Tune-up***
- ***Brakes***
- ***Transmission & Engines rebuilt***
- ***Air-Condition***
- ***Body Work***

**Domestic, European & Japanese car & Vans.**

**We are specialized in**

**HONDA**



***IRIE***
*CA SERVICES*

**86 MELFORD DR, UNIT.5,**
**SCARBOROUGH, ONT.**

**தொடர்புகளுக்கு:~**
*S. Ruban*
**(416) 299-0452**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI & BROTHER'S

நங்கையர் மனங் கவரும்
நவ நாகரீக ஆடைகளுக்கும்

வாலிப உள்ளங்களைக்
கொள்ளைகொள்ளும் ஜீன்ஸ்
சேட் வகைகளுக்கும்

RAJA, PYRAMID, RAMY
போன்ற CD வகைகளுக்கும்

இலங்கை, இந்திய, ஐரோப்பிய
நாடுகளுக்கு துரித பணமாற்றுச்
சேவைகளுக்கும்

சிங்கப்பூரிலிருந்து வரவழைக்கப்பட்ட
22 கரட் தங்க நகைகளுக்கும்

*நீங்கள் நாடவேண்டிய இடம்*

## ஸ்ரீ அன் பிறதர்ஸ்



வீடியோ பிரதி மாற்றம் செய்து கொடுக்கப்படும் PAL<> NTSC

இத்துடன் எமது ஸ்தாபனத்துக்குள்ளேயே இயங்கிக் கொண்டிருக்கிறது

**"POWER OPTICAL"**

**உங்கள் மூக்குக் கண்ணாடி தேவைகளையும்
பூர்த்தி செய்கிறார்கள்**

## ஸ்ரீ அன் பிறதர்ஸ்

1801 Lawrence Ave., Unit #5 (Lawrence/Pharmacy)
Scarborough, Ont.

**Tel/Fax: (416) 752-9960**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TV La Publications Tel:(416) 425-2884 Fax:(416) 425-2625 Quality Printing Services Tel: (416) 291-5384